438

1438

REGISTRAR

22 SEP 1939

135

...the Text Book Committee Madras (vide)
...e Gazette Page No. 221 Dated 2—5—39

SARATHA READING SERIES

BOOK V FOR CLASS V.

சாரதா நவீன

ஐந்தாம் பாடம்.

(ஐந்தாம் வகுப்பு)

BY

T. N. SUBBIAH VASTAD,
Late Assistant,
Veeraraghava's Secondary School,
TANJORE.

T. N. SUBBIAH & SONS
Book-Sellers and Publishers,
TANJORE.

SARATHA READING SERIES:

BOOK V FOR CLASS V.

OFFICE OF THE REGISTRAR
22 SEP 1939
MADRAS

சாரதா நவீன

ஐந்தாம் பாடம்.

1349
1384
494.81186

(ஐந்தாம் வகுப்பு)

BY

T. N. SUBBIAH VASTAD,

Late Assistant,

Veeraraghava's Secondary School, TANJORE.

BY

T. N. SUBBIAH & SONS,

BOOK-SELLERS AND PUBLISHERS,

TANJORE.

Rights Reserved] 1939 [விலை 6 அணா

DON BOSCO PRESS,

TANJORE.

பொருளடக்கம்.

பாடம்.	விஷயம்.			பக்கம்
1.	குதிரை	...	...	5
2.	பரிட்சித்து	...	...	8
3.	நண்டு	...	...	11
4.	எலும்புத்தொகுதி	...	...	13
5.	கோளினால் வந்தகேடு	...	...	17
6.	காற்று	...	...	20
7.	பகீரதன்	...	...	23
8.	தண்டும் குருத்தும்	...	...	27
9.	எறிபத்த நாயனார்	...	...	29
10.	இலைகள்	...	...	33
11.	தமயந்தியும் அன்னமும்	...	...	37
12.	புஷ்பங்கள்	...	...	40
13.	அம்மை நோய்	...	...	43
14.	கர்ணன்	...	...	46
15.	கனியும் வித்தும்	...	...	51
16.	வேடனும் குரங்கும்	...	...	54
17.	தோட்ட நத்தை	...	...	57
18.	ஆகாரமும் ஜீரணமும்	...	...	61
19.	பாண பத்திரன்	...	...	64
20.	பூச்சியினம்	...	...	69
21	கபீர்தாசர்	...	...	72
22	சிறுத் தொண்டர்	...	...	77
23.	பறவைகளின் வகை	...	...	81
24.	ஊர்வன	...	...	85
25.	அரிச்சந்திரன்	...	...	89

26.	சாரணத் தொண்டர் I	...	...	95
27.	ஷை II	...	...	98
28.	கூட்டுறவு இயக்கம் I	...	...	102
29	ஷை II	...	...	107
30.	கஜேந்திரன்	...	...	110
31.	செய்யுட் பாடம்	...	...	113

நவீன

ஐந்தாம் பாடம்.



1. குதிரை.

குதிரை தடித்த மேல் தோலையுடைய ஓர் மிருகம். தோலின் மீதுள்ள மயிர் மிகவும் மிருதுவானது. குதிரையின் தலை பருத்து சற்று நீண்டிருக்கும். இதற்குக் கொம்புகள் இல்லை. கண்கள் பெரியன. காதுகள் பசுவின் காதுகளைவிடச் சற்று சிறியவை. குதிரையின் நாசித் துவாரங்கள் அகன்றவை.

குதிரையின் மேல்வாயில் முன்புறம் ஆறும் கீழ்வாயில் முன்புறம் ஆறும் ஆகப் பன்னிரண்டு உளியைப்போன்ற வெட்டுப்பற்கள் உள.

அன்றி மேல்வாயில் இரண்டும், கீழ்வாயில் இரண்டும் ஆக நான்கு கிழிக்கும் பற்களும் உள. மேல் கடைவாயில் பக்கத்துக்கு ஆறுகப் பன்னிரண்டு அரைக்கும் பற்களும், கீழ்கடைவாயில் பக்கத்திற்கு ஆறுகப் பன்னிரண்டு அரைக்கும் பற்களும் உள. ஆகவே குதிரையின்வாயில் வெட்டுப் பற்கள் பன்னிரண்டும் கிழிக்கும் பற்கள் நான்கும் அரைக்கும் பற்கள் இருபத்து நான்கும் ஆக நாற்பது பற்கள் உள. குதிரையின் முன்வாய்ப் பற்களுக்கும் கடைவாய்ப் பற்களுக்கும் இடையே சிறிது இடை வெளி உண்டு.

குதிரையினுடைய பற்களின் அமைப்பைக் கொண்டு அது சாகபக்ஷிணி என்று நன்கு அறியலாம். பசுவும் சாகபக்ஷிணி யாயினும், அதற்குக் குதிரைக்கிருப்பது போல் கிழிக்கும் பற்கள் கிடையா. மேலும் மேல்வாயில் முன்புறம் எட்டு உளிபோன்ற வெட்டும் பற்களும் கடைவாய்களில் குதிரைக்கு இருப்பதுபோல் இருபத்து நான்கு அரைக்கும் பற்களும் உள. ஆகவே பசுவின் வாயில் வெட்டும் பற்கள் எட்டு அரைக்கும் பற்கள் இருபத்து நான்கு ஆக முப்பத்திரண்டு பற்கள் உள.

குதிரை தனது ஆகாரத்தைக் கடித்துத் தின்னும்; அசைபோடாது. ஆனல் பசு தன்னுடைய ஆகாரத்தைப் பிடுங்கித் தின்னும். மேலும், பசு தான் தின்ற ஆகாரத்தை மறுபடியும் வாயிற் கொண்டு வந்து அசைபோடும்.

குதிரையின் கழுத்து நீண்டது. அதில் பிடரிமயிர் உண்டு. குதிரைக்கு திமில் இல்லை. அதன் வால் குட்டையானது. வாலில் நீண்டு அடர்ந்த மயிர் உண்டு. பசுவின் கழுத்து குதிரைக்கிருப்பது போல் அவ்வளவு நீண்டதல்ல. அதில் பிடரிமயிர் கிடையாது. சிலபசுகளுக்குத் திமில் உண்டு. மற்றும் சிலஜாதிப் பசுக்களுக்குத் திமில் இல்லை. பசுவின் வால் நீளம். வாலின் நுனியில் மயிர்க்குச்சம் உண்டு.

குதிரை ஒற்றைக் குளம்புள்ளது. குளம்புகள் வெகு உறுதியானவை. பசு இரட்டைக் குளம்புள்ளது. அதன் குளம்புகள் குதிரையின் குளம்புகளைப் போல் அவ்வளவு உறுதியானவை அல்ல. நமது விரல் நுனிகளை நகங்கள் காப்பது போல் இம்மிருகங்களின் கால் விரல்களைக் குளம்புகள் காக்கின்றன.

•

குதிரை மனிதனுக்கு மிகவும் உபயோகமுள்ள ஜந்து. அது மிக்க அறிவுள்ளது. மோப்பத்தால் அறியக்கூடியது. மனிதனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தன்மையுடையது. இது தன்னை வருத்துவோரைக் கடிக்கும்; உதைக்கும். குதிரைக்குக் கோபம் வந்தால் தன் காதுகளைப் பின் புறமாய்த் திருப்பும். கழுதை, கோவேறுகழுதை, முதலியன குதிரையினத்தைச் சேர்ந்தவை ஆகும். குதிரைக்கு, பரி, துரகம், கிள்ளை, பாய்மா, துரகதம், வாசி, கற்கி, அரி, மா, அச்சுவம், புரவி, எனப் பலபெயர்கள் உள.

2. பரிட்சித்து.

பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனன் என்பவனுக்கு அபிமன்யு என்ற ஓர் புத்திரன் இருந்தான். அவன் உத்தரையென்னும் ஓர் உத்தமப் பெண்ணை மணந்தான். அப்பெண்மணி ஓர் ஆண்மகவை ஈன்றாள், அச்சேய்க்குப் பரிட்சித்து எனப் பெயரிட்டனர்.

பரிட்சித்து மன்னனுக்கு வேட்டையாடுவதில் மிகப் பிரியம் உண்டு. ஒரு நாள் அவன்

வேட்டையாடக் காட்டிற்குச் சென்ருன். அங்கு அழகிய ஓர் மானைக்கண்டு அதனைப் பின்தொடர்ந்தான். அந்த மான் வெகு விரைவாக ஓடி மறைந்தது. பரிட்சித்து, அம்மானைத்தேடி அது மறைந்த இடத்திற்குச் சென்ருன். அங்கு அவன் மானைக் கண்டானில்லை. ஆனுல் ஓர் முனிவர் உட்கார்ந்து தவம் செய்து கொண்டிருப்பதைக் கண்டான். அவன் அம்முனிவருக்கருகில் சென்று நின்று, "ஐயா இங்கு ஓடிவந்த மானைக்கண்டீரோ? அது எங்குமறைந்தது?" என்று வினவினுன். அம்முனிவர் தவத்தில் ஆழ்ந்திருந்தமையால் யாதொன்றும் கூறினுர் இல்லை. பரிட்சித்து அடங்காச் சினங்கொண்டான். உடனே அவன் அங்கு இறந்து கிடந்த ஓர் மலைப்பாம்பினை எடுத்து அம்முனிவரின் கழுத்தில் மாலையாகயிட்டுச் சென்ருன்.

இதனையறிந்த அம்முனிவர் புதல்வன் "என் தந்தையின் கழுத்தில் இறந்த பாம்பைச் சுற்றிச் சென்ற பாதகன் இன்று ஏழாம்நாள் தட்சகன் என்னும் பாம்பால் தீண்டப்பட்டு இறக்கக்கடவன்" என்று சாபமிட்டான்.

இக்கொடிய சாபத்தைப் பரிட்சித்து அறிந்து மனம் கலங்கினுன். எனினும் ஒருவாறு தேறி அப்பாம்பு தன்னிருப்பிடத்தை அணுகாவண்ணம் ஏழுநாள் வரையில் எச்சரிக்கையுடன்

இருந்தால்தான், உயிர் தப்பலாம் என்றும், முனி புதல்வனுரைபொய்த்துப்போம்என்றும்எண்ணி கங்கையோரத்திலிருந்த தனது அரண்மனையில் வசித்தான். முனிவர் குமாரன் சாபமிட்டு ஆறு நாட்களும் கழிந்தன. ஏழாம்நாள் பரிட்சித்து, கங்கையில் ஓர் அழகிய எலுமிச்சம்பழம் மிதந்து வரக்கண்டான். கண்டதும்தன்னுடைய சேவகர்களைக் கொண்டு அப்பழத்தை எடுத்துவரும்படி கட்டளையிட்டான். சேவகர்களும் விரைந்தேகி அப்பழத்தை எடுத்துவந்து மன்னன் கையில் கொடுத்தனர். மன்னனும் அதை ஆவலுடன் வாங்கி தனது கண்களில் ஒற்றிக்கொண்டான். ஐயோ! பாவம்! அப்பழத்தினுள் மறைந்திருந்த தட்சகன் என்னும் அரவம் பரிட்சித்தைத் தீண்டிற்று. அதனால் முனி புதல்வனின் சாபமும் முற்றுப்பெற்றது. உடனே, விஷம் தலைக்கேறி அவன் இறந்தான்.

பிள்ளைகளே! பரிட்சித்துமன்னனுக்கு வந்த இன்னலை அறிந்தீர்களா? தவம் செய்துகொண்டிருந்த மாமுனிவர்மீது கொண்ட கோபத்தினால் வந்த தீவினையன்றோ? ஆகையால் கோபத்தால் கேடு சம்பவிக்கும் என்பதை அறியவேண்டும்.



3. நண்டு.

நண்டு நீரில் வசிக்கும் ஒருவகைப் பிராணி. அது மேலும் கீழும் தட்டையாகத்தோன்றும். இதன் தேகம் இரண்டு பாகங்களை உடையது. தலையும் மார்பும் சேர்ந்து ஓர் பாகமாகும். வயிறு மற்றோர் பாகமாகவும் பிரிக்கலாம். அது தன் வயிற்றை மடித்து முதல் பாகமாகிய தலையும் மார்பு சேர்ந்த பாகத்தின் கீழ் வைத்துக் கொண்டிருக்கும்.

நண்டின் தலையில் ஒரு ஜோடி உணர்ச்சிக் கொம்புகள் உள. இதன் இரு கண்களும் கலப்புக் கண்கள். ஒவ்வொரு கண்ணும் ஒரு விரல் போன்ற சிறு துண்டின் மேல் பொருந்தியிருக்கிறது. நண்டு, தான் பார்க்கவேண்டியபோது இத்துண்டுகளை நீட்டும். வேண்டாத போது அவற்றை மடக்கி தலைமீதுள்ள சிறுகுழிகளில் வைத்துக்கொள்ளும். வாயில் ஆகாரத்தை நசுக்கக்கூடிய இரு பற்கள் உள.

நண்டிற்கு கால்கள் எட்டு. இவற்றைத் தவிர வாய்ப்புறமாக இரண்டு கால்கள் இடுக்கிகளோடு இருக்கின்றன. இவ்விடுக்கிகள் ஆகாரத்தைப் பிடிக்கவும், சத்துருக்களை எதிர்க்கவும் உபயோகப் படுகின்றன. இவைகள் கால்கள் உதவுவன போல் நடக்க உதவா. ஆகையால் இவற்றைக் கைகள் எனச் சொல்லலாம்.

நண்டுகள் சுவாச இலைகள் மூலம் சுவாசிக்கின்றன. வயலில் வசிக்கும் நண்டு, ஜல மட்டம் வரையில் குழிதோண்டி வசிக்கும். ஏனெனில் அது நீரில்தான் சுவாசிக்கும். நண்டு, வளையை விட்டுத் தரைமீது வெளியே வந்தாலும், அது அடிக்கடி வலைக்குட் சென்று ஜலத்தில் மூழ்கும்.

ஜலத்திலுள்ள பூச்சிகள் புழுக்கள் முதலியன நண்டிற்கு ஆகாரம் ஆகும். ஆகையால் மீனைப்போலவே நண்டிற்கும் ஜலத்தைச் சுத்தம் செய்யும் தன்மை உண்டு. இது குளம், கிணறு முதலியவற்றில் இருப்பது நலமாகும்.

நண்டுகள் முட்டையிட்டுக்குஞ்சு பொரிக்கும். நீரில் வசிக்கும் பலகால்களையுடைய கூனியும் நண்டினத்தைச் சேர்ந்தது.

---

4. எலும்புத் தொகுதி.

தோட்டங்களில் பயிர்களை அழிக்கும்பிராணிகளைப் பயப்படச் செய்ய வைக்கோலினுல் மனித உருவம் ஒன்று செய்துவைக்கிருர்கள் அல்லவா? அவ்வுருவம் நிமிர்ந்து நிற்பதற்காக ஒரு கோலை நிறுத்தி அதன் மேல் வைக்கோலைச் சுற்றுகிருர்கள். இக்கோலில்லாவிடில் அவ்வுருவம், நேராக நிற்க முடியாது. இதுபோலவே நமது முதுகின் மத்தியிலும் ஒரு கோல் இருக்கிறது. அது தான் முதுகெலும்பு. இம்முதுகெலும்பு கழுத்து முதல் இடுப்புவரையில் வியாபித்து இருக்கிறது, இன்னும் பல எலும்புகள் நமது தேகத்தில் பல பாகங்களிலும் இருக்கின்றன. ஓர் மனிதன் தேகத்தில் உள்ள தோல், தசை முதலிய மிருதுவான பாகங்களை எடுத்து விட்டால் மீதியிருப்பவை எலும்புகளின் தொகுதி ஆகும்.

பல எலும்புகள் கோர்வையாக நின்று மனித உருவத்தைத் தீர்மானிக்கின்றன. எலும்புகள் தேகத்திற்கு உறுதியைக் கொடுக்கின்றன. தேகத்திலுள்ள தசைகளைக்கட்ட உதவுகின்றன. மனிதனுக்கு உயிர் நிலையாக உள்ள உறுப்புகளைச் சில எலும்புகள், கூடாகவும், பெட்டியாகவும்,குழாயாகவும் அமைந்துகாப்பாற்றுகின்றன.



நமது உடலின் பல பாகங்களிலுமுள்ள எலும்புகளை ஆராய்வோம். தலையில், கபாலம், முகம் என இருபாகங்கள் உள. நமது கபாலம் எட்டு எலும்புகளாலான ஓர் பெட்டி. இக்கபாலத்தைப் பார்த்தால் அதில்பல வரிகள் காணப்படும். இவைகள் எலும்புகள் ஒன்றோடொன்று

சேர்க்கப்பட்ட வரிகளேயாகும். ஓர் தச்சன் ஒரு பெட்டி செய்யும் போது எவ்வாறு பலகைகளில் பல பற்கள் உண்டாக்கி அவற்றை ஒன்ருெடொன்று அசையாது உறுதியாக இணைக்கிருனே அவ்வாறே கடவுள் நமது கபால எலும்புகளில் பல பற்கள் உண்டாக்கி ஒன்ருெடொன்று அசையாதபடி இணைத்திருக்கிருர். இக்கபாலப் பெட்டிக்குள் மூளை என்னும் உயிர்நிலை வஸ்து ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டிருக்கிறது. நமது முகம் பல சிற்றெலும்புகளால் ஆனது. கீழ் தாடை அசையும், மேல் தாடை அசையாது.

முதுகெலும்பு ஓர் எலும்பால் ஆனதல்ல. இது முப்பத்து மூன்று சிற்றெலும்பு களாலான ஓர் தொடர். நாம் குனிந்து நிமிர்ந்து வேலை செய்வதற்குத் தக்கவாறு வளைந்து கொடுப்பதற்கு ஏதுவாக பல எலும்புகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் ஒவ்வொரு சிற்றெலும்பும் ஓர் மோதிரம் போலிருக்கிறது. அம்மோதிரம் ஓர் புறம் தடித்து அதற்கு எதிர்புறம் முட்கள் போன்ற மூன்று முனைகளோடு கூடி இருக்கிறது. இச்சிற்றெலும்பு, முள்போல் இருப்பதால் இதை முள்ளெலும்பு என்றும் சொல்லலாம். இவைகள் ஒன்றின் மேல் ஒன்ருய்ச் சேர்த்து அடுக்கப்பட்டால் இவற்றினிலுள்ள துவாரங்கள் கூடி ஒரு குழாய்போல் ஆகின்றன. ஆகையால் முதுகெலும்பிற்கு மோதிரக்குழாய் என்று மற்ருெரு பெயரும் உண்டு. இக்குழலிற்குள் மூளையிலிருந்து வரும், முதுகு நரம்பு என்

னும் முக்கியமான நரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்றெலும்புகளில் ஏழு, கழுத்திலும், பன்னிரண்டு மார்பிலும், ஐந்து வயிற்றிலும், ஐந்து இடுப்பிலும், நான்கு ஆஸனப்புறத்திலும் உள.

மார்பு ஓர் கூடுபோல் இருக்கிறது, இக்கூடு பன்னிரண்டு முள்ளெலும்புகள், பன்னிரண்டு ஜோடி விலா எலும்புகள், ஓர் மார்பெலும்பு ஆகிய மூன்றுவித எலும்புகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வெலும்புக் கூட்டினுள் இருதயம், சுவாசப்பை முதலிய அரிய உயிர்நிலை உறுப்புகள் அடங்கியிருக்கின்றன.

நமது இடை மூன்று எலும்புகளால் ஆனது. இவை ஓர் வளையம்போல் சேர்ந்து வயிற்றிலுள்ள உறுப்புகள் நழுவிவிடாமல் தாக்கித்தாங்குகின்றன.

மார்பெலும்பின் உச்சியிலிருந்து கைகளை நோக்கி இருபுறமும் பக்கத்திற் கொன்றாய் இரு எலும்புகள் செல்லுகின்றன பாருங்கள். இவை காரை எலும்புகள் ஆகும். முக்கோணவடிவமாயுள்ள இரு எலும்புகள், புறத்திற்கு ஒன்றாய் இரு தோள்களுக்குப்பின் இருப்பதைக் கவனியுங்கள். இவற்றிற்குச் சப்பை எலும்புகள் எனப் பெயர்.

நமது ஒவ்வொரு கையிலும் முப்பது எலும்புகளும் ஒவ்வொரு காலிலும் முப்பது எலும்புகளும் உள.

நமது சரீரம் திடமாயிருக்க, எலும்புகள் திடமாயிருத்தல் அவசியம். நல்ல இரத்தஓட்டம் எலும்புகளைத் திடப்படுத்தும். அசுத்தமான ஆகாரம் எலும்பின் வலுவைச்குறைக்கும். சாராயம், புகையிலை, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள் எலும்புகளைப் பலஹீனப்படுத்தும். உதாரணமாக குடிகாரர்களின் எலும்பு முறிந்தால் மறுபடியும் அவை ஒன்று சேர அதிக நாள் செல்லும்.

எலும்பு நொய்மையான ஓர் வஸ்து. பீங்கான்போல் உடையக்கூடியது. ஆகையால் நாம் மிக்க உயரத்திலிருந்து குதித்தாலும் அல்லது தவறிக் கீழே விழுந்தாலும் எலும்பு உடையும். எக்காரணத்தினுலாயினும் எலும்பு உடைந்தால் உடனே தக்க வைத்தியரை வரவழைத்துச் சிகிச்சை செய்ய வேண்டும்.

---

5. கோளினுல் வந்த கேடு.

வட இந்தியாவில் மரங்கள் அடர்ந்த ஓர் பெருங்காட்டில் ஒரு சிங்கம் நோயால் வருந்திக் கொண்டிருந்தது. சிங்கம் மிருகங்களுக்கெல்லாம் அரசனுகையால் அதைக் கண்டுகொள்ள காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் தங்கள் இனங்களில் ஒவ்வொன்றை அதனிடம் அனுப்பின. மிருகேந்திரனைக்காணச் சென்ற அப்பிரதிநிதிகள் அதற்கு வேண்டிய இரைகளை எடுத்துச் சென்றன. ஆனுல் பூனைகள்மட்டும் தங்களுக்காக



ஒரு பிரதிநிதியை அச்சமயம் அனுப்பவில்லை.

சிங்கம் பிரதிநிதிகள் கொண்டு வந்த வெகுமதிகளை அன்புடன் ஏற்று அவைகளோடு இன்புடன் வார்த்தையாடியது. எலிகளின் பிரதிநிதியாகச் சென்ற ஓர் சுண்டெலி அக்கூட்டத்தில் பூனைகளின் பிரதிநிதி வரவில்லை என்பதைக் கவனித்தது. பூனைகள், தங்கள், வம்சத்தாருக்கு விரோதிகள் என்பதை உணர்ந்த அச்சுண்டெலி பூனைகளின் இனத்தையே அடியோடு ஒழிக்கத் தகுந்த சமயம் வாய்த்தது என்று சந்தோஷங்கொண்டது. உடனே சுண்டெலி சிங்கத்தை நோக்கி "ஐயனே! தங்களிடம் அடி

யேன் ஓர் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். யானை முதலிய பெரிய மிருகங்களெல்லாம், நோயுற்றிருக்கும் தங்களைக் கண்டு கொள்ள ஒவ்வோர் பிரதிநிதியை அனுப்பியிருக்க மிக்க அற்பப்பிராணிகளாகிய பூனைகள் மட்டும் கர்வத்தினுல், தங்களை அவமதித்து அவர்கள் பிரதிநிதியாக ஒருவரையும் அனுப்பவில்லையே என நான் மிகவும் வருந்துகிறேன்'' என்று கூறிற்று.

இம்மொழிகளைக்கேட்டதும், சிங்கம் பூனைகளின்மீது அடங்காத கோபம் கொண்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் பூனைகளின் பிரதிநிதி அங்கு வந்து சேர்ந்தது. உடனே சிங்கம் அதனை நோக்கி "அடா! அற்பப்பயலே! பெரிய மிருக்ங்கள் யாவும் என்னைக்கண்டுகொள்ள முன்னரே வந்திருக்க, நீ ஏன் இவ்வளவு தாமதமாய் வந்தாய்?'' எனக் கர்ச்சித்தது. அதற்குப் பூனை, மிருகேந்திரனுடைய கோபத்திற்குக் காரணம் எலியின் சூழ்ச்சி என்பதை ஊகித்தறிந்து, சிங்கத்தை நோக்கி "ஆண்டவனே! மற்றெல்லாப் பிராணிகளும் தங்களுடைய நோயைத் தீர்க்க வழி தேடாது தங்களைக் கண்டு கொள்ள மட்டும் வந்தன. ஆனுல் நான் தாங்கள் நோயுற்றிருப்பதைக்கேள்வியுற்றதும், மிக வருந்தி, நோய்க்கு மருந்துதேடிவர இக்காடுமுழுதும் அலைந்தேன். அதனுல் தான் சற்று கால தாமதமாயிற்று. ஆதலின் அடியேனை மன்னிக்க பிரார்த்திக்கிறேன்'' என்றது.

இதைக்கேட்ட சிங்கம் சந்தோஷங்கொண்டு "என் நோய்க்கு மருந்து யாது?" என வினவிற்று. அதற்குப் பூனை " ஐயனே! இக்காட்டில் ஓர் முனிவர் தவஞ்செய்துகொண்டிருந்தார். நான் அவரைப் பணிந்து, தங்களுடைய நோயைத் தீர்க்கும்படியான சிறந்த ஔடதம் யாது என்று கேட்டேன். அவர் அதற்குத் தாங்கள் அநேக சுண்டெலிகளைத் தின்றால் உடனே நோய் நீங்கிப் போம் என்றார்," என்று வணக்கமாய்க் கூறிற்று. சிங்கம் பூனையின் மீது மிக்க சந்தோஷம் கொண்டு அருகிலுள்ள சுண்டெலியைத் தின்றதுமன்றி அக்காட்டிலுள்ள ஏனைய சுண்டெலிகளையும் புசிக்க ஆரம்பித்தது.

பிள்ளைகளே கோள்கூறுவதின் கேட்டைப் பார்த்தீர்களா? பூனையின் மீது கோள் கூறின சுண்டெலி தான் மாண்டதுமின்றி தன் வம்சத்தார் உயிருக்கும் உலைவைத்ததல்லவா. ஆதலால் கோளுரை கூறேல்.

---

6. காற்று.

நாம் வசிக்கும் பூமண்டலத்தை வாயுசூழ்ந்து நிற்கிறது. இதற்கு வாயுமண்டலம் எனப்பெயர். சலிக்கும் வாயுவுக்குக் காற்று என்பது பெயர். எரிந்து கொண்டிருக்கும் ஓர் மேஜை விளக்கின் கண்ணாடி சிம்னிக்குமேல் ஒரு நூலைப் பிடிப்போம். அந்நூல் மேல் நோக்கித் தள்ளப்படுகிறது. மறுபடியும் அம்மேஜை விளக்கின் நடுவி

லுள்ள துவாரங்களண்டை நூலைப்பிடிப்போம். அது துவாரங்களின் வழியாக உள்நோக்கி வளை



கிறது. ஏனெனில், சிம்னிக்குள்ளிருக்கும் காற்று விளக்கு எரிவதால் உஷ்ணப் பட்டு, விசாலித்து, இலேசாகிமேலே கிளம்புகிறது. அவ்விடத்திற்கு விளக்கின் பக்கத்திலுள்ள வாயு, விளக்கின் நடுப்புறமுள்ள துவாரங்கள் வழியே சிம்னிக்குள் செல்லும். இவ்வாறே உலகத்தில் ஏதாவது ஒரு பிரதேசம் சூரிய வெப்பத்தால் உஷ்ணப்பட அங்குள்ள வாயு இலேசாகி மேலேசெல்லப் பக்கப்பிரதேசங்களிலுள்ள வாயு அந்த இடத்தை அடைக்க வருகின்றது. இவ்வாறு வாயு அசைவதை நாம் காற்று என்கிறோம்.

காற்று எத்திசையிலிருந்து வீசுகிறது என்பதை ஓர் காற்றூடியின் உதவியினால் அறியலாம். இதன் தலைப்புறமுள்ள தகரத்துண்டின் ஓர்புறம் ஈட்டிமுனை போல இருக்கிறது, மற்றொருபுறத்தில் ஈட்டியின் பின்புறம்போல் இருபிளவுபட்ட தகடுகள் இருக்கின்றன. இஃது செங்குத்தான ஓர் இரும்புக் கம்பியின் மேல் நிறுத்தப்பட்டிருக்கிறது. செங்குத்தாய் நிற்கும் இக்கம்பியின் நடுவில் இரண்டு கம்பிகள் பொருத்தப்பட்டிருக்கின்

றன. இவற்றின் முனைகள் நான்கு முக்கிய திசைகளைக் குறிக்கின்றன. காற்றுடியின்பின்புறமுள்ள ஈட்டி முனை ஓர் திசையைக்காட்டுகிறது. இம்முனையைக் கவனித்து காற்று எத்திசையிலிருந்து, எத்திசை நோக்கி வீசுகிறதென்றறியலாம்.



காற்றுவீசும் வலிமைக்குத் தகுந்தபடி அதற்குப் பல பெயர்கள் உண்டு. எரியும் நெருப்பிலிருந்து கிளம்பும் புகை செங்குத்தாய் மேலே சென்றால் அப்பொழுது வாயு மண்டலம் நிர்வாதமாய் இருக்கிறது என்னலாம். ஓர் மரத்தின் இலைகள் மட்டும் அசையும்படி காற்று வீசினால் அதை மந்த மாருதம் என்னலாம். பெரிய கிளைகள் அசையும்படி காற்று வீசினால் அதைச் சண்ட மாருதம் என்று சொல்லலாம். பெரு மரங்கள் அசைவதும் மரக்கிளைகள் ஒடிந்து விழுவதும் ப்ரசண்ட மாருதத்தின் வேலையாகும். ஜஞ்சா மாருதம் என வேறோர் வகைக்காற்று உண்டு. அது வீசுங்காலங்களில் மரங்கள் வேரோடு சாயும், வீட்டுக் கூரைகள் தூக்கப்படும்.

காற்று வீசும் திசையிலிருந்தும் அதற்குச் சில பெயர்கள் உண்டு. அவையாவன; தென்றல், மேல்காற்று. வடந்தை என்பனவாம். தென்றல் சித்திரை, வைகாசி மாதங்களில் வீசுகிறது. இது தேகத்திற்குச் சுகத்தைத் தரும்படியானது. மேல் காற்று ஆனி, ஆடிமாதங்களில்வீசுகிறது. வடந்தை கார்த்திகை மார்கழி மாதங்களில் வீசுகிறது. இது குளிர்ந்த காற்று ஆகும். இதனுல் உடம்பிற்குச் சுகக்கேடு உண்டாகும்.

---

7. பகீரதன்.

பண்டைக்காலத்தில் நமதுநாட்டில்பகீரதன் என்ற ஓர் அரசன் இருந்தான். அயோத்தி அவ்வரசனது தலை நகராய் விளங்கிற்று. அவன நற்குண, நற் செய்கைகள் உடையவன். பெரியோரைப் போற்றுபவன், எளியோரை இரட்சிப்பவன், பழிக்கு அஞ்சினவன், பேருக்கமும் விடா முயற்சியுமுடையவன்.

ஒரு நாள் பகீரதன் தனது குலகுருவாகிய வசிஷ்ட மகா முனியை அழைத்து வணங்கி, அவரைத்தனது முன்னோர்களின் வரலாற்றைத் தனக்கு அறிவிக்கும்படி வேண்டினன். அவரும் அதற்கிசைந்து "வேந்தே! உனது மூதாதையர்களில் சகரன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு சாகரர் என்ற அறுபதினாயிரம் புத்திரர்கள் இருந்தார்கள், அவர்கள் கபில முனிவரது சாபத்தினுல் சாம்பலாகிப் பாதாலத்

தில் புதைந்து கிடக்கிருர்கள்” என்று கூறினர். இதைக்கேட்ட பகீரதன் மிக்க விசனமுற்று “முனி சிரேஷ்டரே! என்னுடைய மூதாதையர் களான சகரபுத்திரர்கள் சாம்பலாய் நரகத்தில் கிடப்பதைக் கேட்க என் மனம் சகிக்கவில்லை. அவர்களைக் கரையேற்றும் வழியாதென எனக்கு அறிவித்தருளவேண்டும்.” என்ருன்.

அதற்கு வசிஷ்டர், பகீரதனை நோக்கி “அரசே! தேவலோகத்தில் உள்ள கங்கா நதியை பூமிக்கு வருவித்தல்வேண்டும். அந்தமூதாதையர்களின்

சாம்பலை அந்நதி ஜலத்தால் நனைத்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் நரகம் நீங்கி நற்கதியடைவார்கள்" என்று கூறினர்.

முனிவர் மொழிகளைக் கேட்ட பகீரதன் "நான் கடுந்தவம் புரிந்து கங்கையை பூமிக்கு வருவிப்பேன். என் மூதாதையர்களைக் கரையேற்றுவேன்" என்று மன உறுதிகொண்டான். தனது பிரதான மந்திரியை அழைப்பித்து "அமைச்சே! நான் கங்கா நதியைப் பூமிக்கு அழைக்கத் தவம்புரியத் தீர்மானித்திருக்கிறேன். நான் தவம் செய்துத் திரும்பி வரும் வரையில் நீர் எனது பிரதிநிதியாகவிருந்து அரசாட்சி புரிந்துவரவேண்டும்" என்று கூறி இமயமலைச் சாரலையடைந்து பிரமனை நோக்கி கடுந்தவம் புரிந்தான்.

நான்முகன் பகீரதனுக்கு தரிசனம்கொடுத்துக் கங்காதேவியைக் குறித்துத் தவஞ் செய்யக் கட்டளையிட்டான். அவ்வாறே அவன் கங்கா தேவியை எண்ணித்தவம்புரிய கங்கா தேவியும் அவன் முன் தோன்றி "வேந்தே! நான் பூமிக்கு வந்தால் என்னைப் பொறுக்க வல்லாரைத் தேடித் தவம் புரிக" என்று கூறி மறைந்தாள். திரும்பவும் பகீரதன் பிரமனைத் தியானித்துத் தவம் இயற்றினன். அயனும் அரசன் முன் தோன்றினன். அரசன் கங்காதேவி கூறின மொழிகளைப் பிரமனுக்கு அறிவித்தான். பிரமன் சிவனை நினைத்து தவம் புரியும்படி அரசனுக்கு அறிவித்து மறைந்தான்.

மீண்டும் பகீரதன் சிவபெருமானைக் குறித்து தவம் இயற்றினன். சிவபெருமான் அரசன்முன் தோன்றினான். அரசன் அவரை வணங்கித் துதித்து 'தேவர் தேவே! நான் கங்கையை எண்ணித்தவம் செய்து அவளை பூமிக்கு வர வழைப்பேன். அவளைத் தாங்கள் தயவுசெய்து தாங்கித்தரவேண்டும்" என்று பிரார்த்தித்தான். சிவபிரானும் அவ்வாறு செய்வதாகச் சொல்லி மறைந்தார்.

மறுபடியும் பகீரதன் கங்கா தேவியையும் சிவபிரானையும் குறித்துக் கடுந்தவம் இயற்றி னான். கங்கை வானுலகிலிருந்து, வெகு வேக மாய்ப் பேரிரைச்சலோடு கீழே இறங்கினாள். சிவபிரான் பூமியிலே விரித்த சடையுடன் தோன்றி அக்கங்கையை தனது சடையிலே மறைத்தார். பிறகு தனது சடையிலிருந்து ஒரு சிறிது கங்கைப் பெருக்கை இமயமலையில் விழும் படி செய்தார். கங்கை நீர் இமயமலையினின்று ஓர் ஆறாய் ஓட ஆரம்பித்தது.

பகீரதன் தேர்மீது ஏறி முன் செல்லக் கங் கையும் பின் தொடர்ந்து ஓடலுற்றது.

கங்கை ஆறு ஓடிவரும் வழியில் ஜன்னு முனிவர் யாகம் செய்துகொண்டிருந்தார். அவர் தனது வேள்வி கெட்டுப்போம் என நினைத்துக் கங்கை நீர்ப்பெருக்கைத் தனது கையிலெடுத்துக் குடித்து விட்டார். உடனே கங்கை நீர் வற்றியது. பகீரதன் துக்கங் கொண்டு தான் கங்கையை கொண்டுவந்த வர

லாற்றை முனிவருக்கு அறிவித்தான். முனிவர் பகீரதனுடைய பக்தியையும் முயற்சியையும் கண்டு மகிழ்வுற்றுக் கங்கையைத் தனது வலக் காதின் வழியாகக் கீழே விழச் செய்தார். கங்கை திரும்பவும் பெருகி ஓடிற்று. பாதலத்துள் புகுந்து சகர புத்திரர்களுடைய சாம்பலை நனைத்தது. அவர்கள் வானுலகடைந்தார்கள். பகீரதன் அயோத்தியடைந்து மகிழ்வுற்று வாழ்ந்தான்.

---

8. தண்டும் குருத்தும்.

ஒரு விதையினுள் அடங்கியிருந்த குழந்தைச் செடியின் அடிப்பாகம் நேராக கீழ் நோக்கி வளர்ந்து வேராகிறது. அதன் தலைப் பாகம் பூமிக்குமேல் நீண்டு வளர்ந்து பலகிளைகள் இலைகளோடு விளங்குகிறது. இவ் விதம் பூமிக்கு மேல் வளர்ந்த பாகத்திற்குத் தண்டு எனப்பெயர். இதற்கு பிரகாண்டம் என மறு பெயரும் உண்டு. ஓர் செடியின் தண்டு பாகத்தில் கணுக்களையும், குருத்துகளையும், இலைகளையுங் காணலாம்.

குருத்து என்ற பதத்திற்குக் குறுகிய தண்டு என்பது பொருள். ஒரு குருத்தில் தண்டில் காணக்கூடிய கணுக்களும் இலைகளும் குறுகி அமைந்திருக்கின்றன. குருத்துகள் வளரும் போது இலைகள் விட்டுக்கொண்டே போகின்றன.

ஓர் இளஞ்செடியின் நுனியைக்கவனித்துப் பாருங்கள். அதில் ஓர் குருத்தைக் காணலாம். இதற்கு நுனிக்குருத்து எனப்பெயர். இக்குருத்து

வளர்வதால் செடி உயருகிறது. இலைகளுக்கும் தண்டிற்கும் இடையே உள்ள கணுச் சந்துகளை உற்றுப்பாருங்கள் அங்கும் சில குருத்துகள் உள. இவைகள் கணுக் குருத்துகள் அல்லது பக்கக்குருத்துகள் ஆகும், இவை வளர்வதால் கிளைகள் உண்டாகின்றன. சில மரங்களுக்குக் கணுக்குருத்துகள் இல்லை. இவ்வித மரங்களுக்குக் கிளைகள் இல்லை. கணுக்குருத்துகள் உள்ள மரங்களில் நுனிக் குருத்துகள் வளர்ந்தபிறகு அல்லது அழிந்தபிறகுதான் கணுக்குருத்துகள் வளர்ந்து கிளைகள் ஆகும். ஆகையால் நாம் பூவரசு போன்ற மரங்கள் நன்றாய் கிளைவிடுவதற்காக அவற்றின் தலையைக் கழிக்கிறோம்.



சில செடிகளில் தண்டு பாகம் பூமிக்குள் தங்கி வளரும். வாழை, கருணை, இஞ்சி, மஞ்சள், சேம்பு, உருளைக்கிழங்கு முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தவை ஆகும்.

சில செடிகளின் தண்டு மெலிந்து நீண்டு வளரும். இவற்றிற்குக் கொடிகளெனப் பெயர்.

இக்கொடிகள் படரப் பல இயற்கை சாதனங்கள் உள. தூதுவளைபோன்ற கொடிகளில் சுணை முட்கள் படர சாதகமாகின்றன. புடலில் கணுச் சந்துகளில் உண்டாகும் பற்றுக் கம்பிகளும், வெற்றிலையில் கணுக்களில் உண்டாகும் தொத்து வேர்களும் படரச் சாதனங்களாகின்றன. அவரை போன்ற கொடிகளின் தண்டு ஒன்றைப் பற்றிச் சுற்றிக்கொண்டு படரும்.

தண்டுகள், கிளை இலைகளைத் தாங்குகின்றன. வேர் கொடுக்கும் ஆகாரத்தை இலைகளுக்கும் இலைகள் கொடுக்கும் ஆகாரத்தை வேருக்கும் வாங்கிக் கொடுக்கின்றன. முள்ளங்கிபோன்ற செடிகளில் ஆகாரக் களஞ்சியமாகின்றன. சுவாச வேலையைச் செய்கின்றன. பசுமை நிறமாயிருக்கும்போது இலைகள் செய்யும் வேலையைச் செயகின்றன. எரிதுரும்புகளாக உபயோகப்படுகின்றன. சிலவற்றில் எண்ணெய் எடுக்கலாம். இன்னும் சிலவற்றின் பட்டைகள் மிக்க உபயோகமாகும்.

---

9. எறிபத்த நாயனர்.

வெகு நாளைக்குமுன், சோழ நாட்டுத் தலைநகராயிருந்த கரூரில் ஓர் சிவ பக்தர் இருந்தார். அவர் சிவனடியார்களை மிக்க அன்புடன் ஆதரித்து வந்தார். சிவனடியார்களுக்கு யாரேனும் இடர் செய்தால் அவரை, அவர் தனது மழுவி

ஞல் வெட்டித்தண்டித்து வந்தமையால் அச் சிவபக்தருக்கு எறிபத்த நாயஞர் என்னும் பெயர் விளங்கி வந்தது.

அவர் காலத்தில், அவ்வூரில் சிவகாமியாண்டார் என்ற ஓர் பெரியவர்இருந்தார். அவர் சிவ பக்தியிற் சிறந்தவர். அவர் நாடோறும் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்வார். திருநந்த வனத்திற்குச் செல்வார். அன்று அலர்ந்த புஷ்பங்களைக் கொய்வார். அவ்வூரிலிருந்தசிவாலயத் திற்குச் செல்வார். அப்புஷ்பங்களை மாலையாகக் கட்டி சுவாமிக்குச் சாத்தி ஆனந்தங்கொள்வார்.

ஒரு நாள் சிவகாமியாண்டார், வழக்கப்படி புஷ்பங்களைக் கொய்து ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு ஆலயத்திற்குச் சென்ருர். போகும்வழியில் அவர் பின்னே வந்த அரசனது பட்டத்து யானை, அவருடைய கையிலிருந்த பூங்கூடையைப் பறித்துச் சிதறியது. சிவகாமியாண்டாரும் முதியவராகையால் கால்கள் தவறிக் கீழே விழுந்தார். பிறகு, அவர் மெல்ல எழுந்து நின்று வருத்தத்துடன் "ஐயோ! ஈசனுக்குச் சாத்தும்படி கொண்டுவந்த மாலை வீணுயிற்றே என்று ஓல மிட்டார்.

இச்செய்தியைக் கேட்ட எறிபத்த நாயஞர் வெகு கோபங்கொண்டார். விரைந்தோடி தன் கையிலிருந்த மழுவிஞல், யானையையும் யானைப் பாகர்களையும் வெட்டி வீழ்த்தினர். யானையும், பாகர்களும் இறந்த செய்தி அரசன் செவிக்கு ஏறியது. அரசன் அடங்காக் கோபங்கொண்

டான். ஓர் குதிரைமீது ஏறித்தனது சேவகர்களுடனே யானையும், பாகர்களும் இறந்துகிடந்த இடத்திற்குச் சென்று அங்கிருந்தவர்களை விளித்து "எனது பட்டத்து யானையையும், பாகர்களையும் கொன்ற பாதகன் யாவன்?" எனக் கேட்டான். அவர்கள் அங்கு நின்ற எறிபத்த நாயனுரைக் குறிப்பிட்டார்கள்.

அரசன் நாயனுரைக் கண்டதும் அவனது கோபம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கியது. நாயனுர் கோபங்கொள்ளும்படி யானையும், பாகர்

களும் யாதோ தீங்குசெய்திருக்கவேண்டுமென்று தீர்மானித்தான். குதிரையினின்று கீழே இறங்கி நாயனுர் முன்சென்று அவரை வணங்கி 'ஐயா! இந்த யானையும், பாகர்களும் செய்த குற்றத்திற்கு அவர்களைமட்டும் கொன்றது போதுமா?" என்று கேட்டான். அதற்கு நாயனுர் "அரசே! சிவ காமியாண்டார் திருக்கோவிலுக்குச் செல்லும் வழியில் அவர் கையிலிருந்த பூங்கூடையை இந்த யானை பறித்துச் சிதறியது. அது அவ்வாறு செய்யும்போது பாகர்கள் அதைச் சிறிதேனும் தடுக்கவில்லை. அதற்காக அவர்களைக் கொன்றேன்" என்ருர். அதுகேட்ட அரசன் நாயனுரை வணங்கி "ஐயா! இக்குற்றத்திற்கு யானையையும் பாகர்களையும் கொன்ருல் மட்டும் போதாது, அடியேனையும் உமது திருக்கரத்தால் கொல்ல வேண்டும்" எனக்கூறித் தனது உடைவாளை நாயனுர் முன் நீட்டினுன்.

எறிபத்த நாயனுர் அரசனது அளவிறந்த அன்பைக் குறித்து ஆச்சரியங்கொண்டார். தனது யானையும் பாகர்களும் இறந்ததற்கு வருத்தப்படாமல் தன்னையும் கொல்லும்படி வேண்டுகிற அரசனுக்குத்தீங்கு இழைத்தோமே என்று வருத்தங் கொண்டார். அரசன் நீட்டிய உடைவாளை வாங்கினுர். இத்தகைய அரசனுக்குத் தீங்கு செய்தமைக்குத்தானே தன்னுயிரைமாய்த்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தார். வாளைத் தன்னுடைய கழுத்திலே பூட்டி அறுக்கத் தொடங்கினுர். அரசன் நடுநடுங்கி, நாயனு

ருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு அவர் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தான். உடனே "யானை புஷ்பக் கூடையைச் சிதறும்படி பரமசிவனார் செய்தார்" என்று ஓர் திரு வாக்கு ஆகாயத்தில் பிறந்தது. யாவரும் அதைக் கேட்டு ஆச்சரிய மடைந்தார்கள். அரசனது நீதியும், நாயனாருடைய பக்தியும் நாடெங்கும் பரவின.

10. இலைகள்.

அனேகமாய் எல்லாத் தாவரங்களும் பசுமை நிறமுடையவை. தாவரங்களின் பசுமை நிறம் நமது கண்களுக்கு இனிமையையும் சுகத்தையும் தருகிறது. தாவரங்களில் பசுமை நிறம் மிகுந்த பாகம் இலைகளேயாகும்.

இலை ஓர் தாவரத்தின் மெலிந்து, பரந்து, பசுமை நிறத்தோடு விளங்கும் உறுப்பு ஆகும். இலையில் அடியிலுள்ள குச்சிபோன்ற பாகம் காம்பு. காம்பின்மேல் உள்ள அகன்ற பாகம் இலைப்பரப்பு. இலைப்பரப்பிற்கு பத்ரம் என மறு பெயர் உண்டு. ஆகவே ஓர் இலை காம்பு, இலைப் பரப்பு என இருபாகங்களையுடையது. ஓர் இலையைத் தண்டுடன் பொருத்துவது காம்பு ஆகும். இக்காம்பு தண்டுடன் பொருந்தியிருக்குமிடமே கணு. இலைக்காம்பு சில இலைகளில் நீளமாயும் மற்றும் சிலவற்றில் குட்டையாயும் இருக்கும்.

ஓர் ஆலிலையைப்பறித்து அதன் இருபக்கங்களையும் தடவிப்பாருங்கள். மேற்புறம் வழவழப்பாயும், அடிப்புறம் அவ்விதமில்லாமல் சுறசுறப்பாயும் இருக்கும். ஏனெனில் அதிலுள்ள நரம்புகள் அடிப்புறம் பிதுங்கியிருக்கின்றன. ஆலிலையில் இந்நரம்புகளின் அமைப்பைக் கவனியுங்கள். இதன்காம்பின் தொடர்ச்சியாய் ஒரு நரம்பு நேர் மேல் நோக்கிச் செல்லுகிறது. இதற்குநடு நரம்பு எனப்பெயர். இந்தநரம்பிலிருந்து, கிளை நரம்புகள் இறகுகள் போல் பிரிவதைக்கவனியுங்கள். இவ்வித நரம்பு ஒழுங்குள்ள இலைகளுக்கு இறகொ



ழுங்கு நரம்பு இலைகளெனப் பெயர். ஓர் பூவரசு இலையைப் பறித்து அதன் நரம்புகளின் போக்கைக் கவனிப்போம். இதனை இலைக்காம்பின் தலையிலிருந்து ஐந்துநரம்புகள் கை விரல்கள் போல் பிரிகின்றன. இம்மாதிரியான நரம்பு அமைப்புள்ள இலைகளைக் கை ஒழுங்கு நரம்பு இலைகளெனச் சொல்லலாம். பிள்ளைகளே! நீங்கள் நமது பள்ளிக்கூடத்தோட்டத்திலுள்ள

செடிகளின் இலைகளைக் கவனித்து அவற்றில் எச்செடிகளில் உள்ள இலைகள் இறகொழுங்கு நரம்பு இலைகள், எச்செடிகளில் உள்ளவைகை ஒழுங்கு நரம்பு இலைகள் என்பதைக் கவனித்து வாருங்கள்.



வாழை இலை, ஆலிலை ஆகிய இவ்விரண்டு இலைகளின் நரம்புகளின் போக்கைக் கவனியுங்கள். இரண்டும் இறகொழுங்கு நரம்புஇலைகளாகக் காணப்படுகின்றன. இரண்டு இலைகளையும் . பல துண்டுகளாக்கிக் கிழித்துப்பாருங்கள். வாழையிலை நேராகக் கிழிகிறது. ஆலிலை, அவ்வாறில்லை. ஏனெனில்வாழை இலையில் கிளை நரம்புகள் நேர் போக்காகக் காணப்படுகின்றன. ஆலிலையில் கிளை நரம்புகள் வலைக் கண்களாகப் பின்னிக்கொள்ளுகின்றன. ஆகவே வாழை இலை போன்றநேர்ப்போக்கான நரம்புகளுள்ள இலைகளை நேர் நரம்பு இலைகள் என்று சொல்லலாம். ஆலிலையில் காணப்படுவதுபோல்

இலை நரம்புகள் வலைக்கண்களாய்க் காணப்படும் இலைகள் யாவும் வலை நரம்பு இலைகள் ஆகும். ஒற்றைப் பருப்புத் தாவரங்களின் இலைகள் யாவும் நேர் நரம்பு இலைகளாய் இருக்கும். இரட்டைப் பருப்புத்தாவரங்கள் இலைகள் யாவும் வலை நரம்பு இலைகளாயிருக்கும்.

எல்லாத் தாவரங்களிலுள்ள இலைகள் வடிவத்தில் ஒத்திரா. சில முட்டை வடிவமாகவும், சில வட்டவடிவமாகவும் மற்றும் சில நீண்ட சதுரவடிவமாகவும், வேறு சில ஈட்டிவடிவமாகவும், இன்னும் சில நீண்டவடிவமாகவும் இருக்கும். பிள்ளைகளே! மேற்கூறிய வடிவங்களுள்ள இலைகளில் ஒவ்வொன்றை நாளை நீங்கள் நமது பள்ளிக்கூடத் தோட்டத்திலிருந்து பறித்து வரவேண்டும்.

ஓர் இலையின் அடிப்புறத்தைப் பூதக்கண்ணாடியில்வைத்துப்பார்த்தால் அதில் அனேக சிறு துவாரங்கள் புலப்படும். இத்துவாரங்கள் இலை வாய்கள் ஆகும். இத்துவாரங்களின் மூலமாய்த் தான் செடிகள் சுவாச வேலையையும், ஆகார சேகரவேலையையும்செய்கின்றன. இவ்வேலைகள் இலைகள் எவ்வாறு செய்கின்றன வென்பதை நீங்கள் மேல் வகுப்பில் அறிவீர்கள்.

இலைகள் சுவாச உறுப்புகளாகின்றன. அவை ஆகார சேகர வேலை செய்கின்றன.

தாவரங்களிலுள்ள அதிக ஜலத்தை வெளியேற்றுகின்றன. சிலசெடிகளில் இலைகள் புஷ்ப இதழ்கள்போல் உதவுகின்றன. சில இலைகளிலி

ருந்து, தைலம் எடுக்கலாம். மற்றும் சில இலைகளினின்றும் நார் எடுக்கலாம். இலைகளில் அநேகம் பிராணிகளுக்குத் தீனியாகின்றன.

---

11. தமயந்தியும் அன்னமும்.

முன்னாளில் நமது தேசத்தின் வடபாகத்தில் நிடதம் என்னும் ஓர்வளநாடு, மற்றெல்லா நாடுகளிலும் சிறப்புற்று ஓங்கி விளங்கி வந்தது. அந்நாட்டை ஒருகாலத்தில் நளன் என்னும் ஓர் உத்தம அரசன் நீதிதவருது அரசாட்சி செய்து வந்தான். அழகிலும், உத்தம குணங்களிலும் அவனுக்கு நிகரான வேறு அரசன் அக்காலத்து இல்லை.

ஒரு நாள்; மாலைப்பொழுதில் நளன் தனது அரண்மனைக்குப் பின்புற மிருந்த பூங்காவனத்திற்கு உலாவச்சென்றான். அப்பூஞ்சோலையில், நறுமணங்கமழும் பல வகைப் புஷ்பங்களும் இனிய பழங்கள் தரும் பலவகை மரங்களும், இன்னிசை பாடும் பல புள்ளினங்களும் நிறைந்து இருந்தன. அப்பூங்காவின் இடையில் அழகிய தாமரைத்தடாகம் ஒன்று உண்டு. அக்குளநீர் ஸ்படிகம்போல் தெளிவாக இருந்தது. அதில் நீண்டகாம்புகளோடும் அகன்ற இலைகளோடும் கூடின தாமரை படர்ந்து எங்கு பார்த்தாலும் செந்நிறம் வாய்ந்த தாமரைப் புஷ்பங்கள் பல புஷ்பித்திருந்தன. பல அன்னங்கள் புஷ்பங்களின் அழகைக்கண்டு மயங்கி அத்

தடாகத்தை விட்டுநீங்க மனமில்லாமல் அங்கு நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன.



அவ்வன்னங்களில் ஒன்று யாவரும் விரும்பத்தக்கவாறு, பொன்னிறச் சிறகுகளோடும் செந்நிறக்கால்களோடும் விளங்கிற்று. அரசன் அவ்வன்னத்தை வெகு கூர்மையாகக் கவனித்துக் கொண்டு, திகைத்து நின்றான்.

அரசனருகில் நின்றிருந்த பணியாளர்களில் ஒருவன் மன்னனது உள்ளக்குறிப்பையறிந்து, அவ்வன்னத்தைப் பிடித்து அரசன் கையில் கொடுத்தான்.

அரசன் அவ்வன்னத்தைக் கையிலேந்தித் தனது தொடையில் வைத்துக்கொண்டு அதன்

விசித்திரமான சிறகுகளைப் பிரித்து உற்றுநோக்கினான். அவ்வன்னம் அரசன் தனக்கு ஏதாயினும் தீங்கு செய்வானோ என்று நடுங்கி அவனை நோக்கி "வேந்தர்வேந்தே! என்னைக்கொல்லாது விட்டுவிடுவாயாயின் என்னால் கூடிய பிரதிஉபகாரத்தை நான் உமக்கு மறவாமல் செய்வேன்" என்று விநயமாய் வேண்டிற்று. அரசனும் மனமிரங்கி அவ்வன்னத்தை விட்டு விட்டான்.

பிறகு அன்னம், அரசனது தயாள குணத்தைமெச்சி, அவனுக்கு ஓர் உத்தம அரசகன்னிகையை மணம்புரிவிக்க எண்ணிற்று. உடனே அவ்வன்னம் வட இந்தியாவில் உள்ள விதர்ப்ப நாட்டு அரசனது அரண்மனையை நோக்கிப் பறந்து சென்றது. விதர்ப்பநாட்டரசனான வீமனுக்கு ஓர் அருமைப்புதல்வியிருந்தாள். அவள் பெயர் தமயந்தி. அவள்வனப்பிற்சிறந்த உத்தமி. இச்சிறுமி, தனது பூங்காவனத்தின் நடுவிலுள்ள ஓர் அணிமேடையில் தனது தோழிகளோடு உல்லாசமாய்ப்பேசிக்கொண்டுஉட்கார்ந்திருந்தாள். அச்சமயம் இவ்வன்னம் தமயந்தியின் அருகிற் பறந்து சென்று உட்கார்ந்து, நளனது அழகை வர்ணித்தது. இவ்வன்னத்தின் மொழிகளைச்செவியுற்ற தமயந்தி அளவில்லா ஆனந்தங்கொண்டாள். நளனையே தான் நாயகனாக அடைய வேண்டுமென்றுமனவுறுதிசெய்துகொண்டாள்.

சில நாட்களுக்குப்பிறகு தமயந்தியின் சுயம்வர திருநாளும் குறிக்கப்பட்டது. நாடெல்லாம் அலங்கரிக்கப் பட்டது. பலதேச மன்னர்கள்

அச்சுயம்வரத்திற்கு வந்திருந்தார்கள். அவர்க களில் ஒவ்வொருவருடைய குணதிசயங்களைப் பற்றி தமயந்தியின் தோழி அவளுக்குக் கூறினள். முடிவில் தமயந்தி நளனுக்கே மணமாலையிட்டாள். இருவரும் நெடுநாள் சுகமுற்று வாழ்ந்தனர்.

12. புஷ்பங்கள்.

ஓர் செடியின் இனவிருத்திசெய்யும் உறுப்புகள் புஷ்பங்களேயாகும். ஓர் இலைக்குக் காம்பிருப்பது போல் புஷ்பத்திற்கும் காம்பு உண்டு.



ஓர் புஷ்பத்தின் காம்பிற்கு பூக்காம்பு அல்லது விருந்தம் எனப்பெயர். சில புஷ்பங்களின் காம்பு நீளம். மற்றும் சிலவற்றின் காம்பு குட்டை. ஓர் செடியில்புஷ்பத்தின் காம்பு பொருந்தியிருக்கும் இடத்தைக்கவனி அது இலைக் காம்பிற்கும் தண்டிற்கும் இடையில் உள்ள கணுச்சந்தில்தான்பொருந்தியிருக்கிறது. ஆகவே புஷ்பங்கள் கணுச்சந்தில் தான் உண்டாகின்றன என்பது நன்கு விளங்குகிறது,

ஓர் பூவின் பாகங்களையறிய ஒரு ஊமத்தம் பூவை எடுத்துப் பரிசோதிப்போம். இப்புஷ்பத்தின் காம்பு குட்டையாகவிருக்கிறது. இக்காம்

பின் தலையில் பசுமையான ஓர் குழாய் பொருந்தி யிருக்கிறது. இதற்குப் புறவிதழ்க்குழாய் அல்லது புஷ்பகவசம் எனப்பெயர். இப்புஷ்பகவசம் புஷ்பம் இளமையாய் அல்லது மொட்டாய் இருந்த போது புஷ்பத்தின் மற்றெல்லா பாகங்களையும் இதனுள் அடக்கிகொண்டு காப்பாற்றிற்று.

இப்புஷ்பக்கவசத்திற்கு அடுத்தாற் போல் வெண்மையான ஐந்து தளங்கள் ஒரு புனல் போல் ஒன்றுசேர்ந்திருக்கின்றன. இதை உள்ளிதழ்ப்புனல் அல்லது தளப்புனல் என்று சொல்லலாம். இத்தளங்கள் புறவிதழ்கள் போலப்பசுமையாய் இல்லை. புஷ்பதளங்கள் புஷ்பத்திற்கு அழகு செய்யும் பாகங்கள் ஆகும்.



ஊமத்தம்பூவின் தளக்குழாய்க்குள்ளிருந்து ஆறு கம்பிகள் வெளி வந்திருப்பது தெரிகிறது. தளக்குழாயைக் கிழித்துப்பாருங்கள் ஐந்துகம்பிகள் தளக் குழாயில் அடிபாகத்தில் ஒட்டியிருக்கின்றன. இவ்வைந்து கம்பிகளுக்கும் மகரந்தக்கம்பிகள் என்றுபெயர். இக் கம்பிகளின் நுனியைக் கவனியுங்கள். ஒவ்வொன்றின் தலையிலும் ஓர் பைபோன்ற பெட்டியிருக்கிறது. இப்பெட்டிக்கு மகரந்தப்பெட்டி எனப்பெயர். இப்பெட்டிக்குள் மகரந்தப்பொடி அல்லது பூந்தாதுக்கள் உள.

இப்பூவின் நடுவில் தளங்களோடு ஒட்டாமல் தனித்திருக்கும் கம்பி கீலம் ஆகும். இக்கம்பியின் அடிப்புறம் குண்டுபோல் பருத்திருக்கிறது. இப்பருத்த அடிபாகத்திற்கு கருப்பெட்டி என்று பெயர். இக்கருப்பெட்டிக்குள், பின்பு விதைகளாக வேண்டிய விதைச் செதில்கள் அடங்கி யிருக்கின்றன. கீலக்கம்பியின் நுனியைக் கவனியுங்கள். இது ஒரு கிண்ணம்போல் இருக்கிறது. இப்பாகத்திற்கு கீலத்தலை, அல்லது கீல அக்ரம் எனப்பெயர். கீலத்தலை, கீலம் கருப்பெட்டி ஆகிய இம்மூன்றும் சேர்ந்து கர்ப்ப கோசம் ஆகும்.

இப்புஷ்பத்தின் கீலத்தலையில் விரலைவைத்தால் அது விரலில் ஒட்டுகிறது. ஏனெனில் அதில் பிசின் போன்ற ஒரு வஸ்து இருக்கிறது. இது முக்கியமான வஸ்து. பூந்தாதுக்கள் கீலத்தலையில் பட்டால் அவை அதில் ஒட்டிக்கொண்டு கீலக்கம்பியின் வழியாய் கருப்பெட்டியை அடைகின்றன. கருப்பெட்டியிலுள்ள விதைச் செதில்களோடு, பூந்தாதுக்கள் சேர்ந்தவுடன் விதைச் செதில்கள் விதைகளாக மாறுகின்றன. விதைகள் முற்றிக் கருப்பெட்டியாக விளங்குகிறது.

பூந்தாதுக்கள் கீலத்தலையை எவ்வாறு அடையும் என்பதைக் கவனிப்போம். காற்று வீசும்போது பூந்தாதுக்கள் பறந்து கீலத்தலையை ஒருவாறு அடையலாம். பூச்சிகள் புஷ்பங்களிலுள்ள தேனைப்பருகும்போது இவற்றின் மீது பூந்தாதுக்கள் ஒட்டிக்கொள்ளுகின்றன. இப்பூச்

சிகள் மற்றப்பூக்களுக்குத்தேன் பருகப் போகும் போது அவற்றின் மீது ஒட்டியுள்ள பூந்தாதுக்கள் கிலத்தலையில் விழுகின்றன. புஷ்பங்களின் அழகுள்ள தளங்களும், மணமும், தேனும் பூச்சிகளைத் தங்களிடம் அழைக்கின்றன.

---

13. அம்மை நோய்.

இராமன்:—"கோபாலா! இப்படத்திலுள்ள இரு உருவங்களையும் பார். இவை ஒரே சிறுவனுடைய உருவப்படங்கள்."



கோபாலன்—"இராமா! ஏன் பொய் சொல்லுகிறாய்? இவ்விரண்டும் ஒரே சிறுவனுடைய உருவப்படங்கள் என்றால் யாராவது நம்புவார்களா? முதல் உருவம் வெகு இலக்ஷணமாய் இருக்கிறது. இரண்டாவது உருவம் வெகு குரூப

மாய் இருக்கிறது. ஆகையால் இரண்டும் வெவ்வேறு சிறுவர்களின் உருவப்படங்களாய் இருக்க வேண்டும்.”

இராமன்:—“கோபாலா! முதல் படம் சிறுவன் அம்மை நோயால் பீடிக்கப்படுமுன் இருந்தபடி காட்டுகிறது. இரண்டாவது படம் அவன் அம்மை நோயால் பீடிக்கப்பட்டபின் இருப்பதைக்காட்டுகிறது. ஆகையால் இவ்விரண்டும் ஒரே சிறுவனுடைய உருவப்படம் தான்.”

கோபாலன்:—“அம்மை என்பது யாது?”

இராமன்:—“அது ஓர் கொள்ளை நோய் சீக்கிரம் பிறரைத் தொத்திப் பரவும்.”

கோபாலன்:—“அந்நோய் எவ்விதம் உண்டாகிறது?”

இராமன்:—“இந்நோய்க்குக் காரணம் சில விஷமுள்ள முளைக்கிருமிகளேயாகும். இக்கிருமிகள் ஒருவனுடைய தேகத்திலுள்ள இரத்தத்தை அடைந்து அதை விஷப்படுத்தி அம்மை நோயை உண்டு பண்ணுகின்றன. இக்கிருமிகளுக்கு அம்மைக்கிருமிகளெனப் பெயர்.”

கோபாலன்:—“அந்நோயின் அறிகுறிகள் யாவை?”

இராமன்:—இந்நோய் ஒருவனுக்கு முதலில் கடுஞ்சுரத்தில் ஆரம்பமாகும். சுரங்கண்ட சுமார் மூன்று நாட்களுக்குப் பிறகு அவன் உடலெங்கும் சிறு கொப்புளங்கள் காணப்படும். அவன் சுரத்தினுலும் இக்கொப்புளங்களினுலும் வெகு

அவஸ்தைப்படுவான். இவ்வியாதி அவனருகிற் செல்லுகிறவர்களேயும் தொத்திப்பிடிக்கும். அம்மைநோய் கண்டவர்கள் பிழைப்பது மிக அரிது. அவ்வாறு தப்பிப் பிழைத்தாலும்குருடர்களாகவோ, அல்லது முடவர்களாகவோ, அல்லது குருபிகளாகவோ ஆகிறுர்கள்."

கோபாலன்:—"இராமா! இக்கொள்ளை நோயைப்பற்றிக் கேட்கும்போதே என் உடல் நடுங்குகிறது. இந்நோய்க்குச்சிறந்தமருந்து இல்லையா?"

இராமன்:—"இந்நோய் ஒருவனைப்பற்றின பின்பு அதைத் தீர்ப்பதற்கு மருந்தே இல்லை. ஆனுல் ஒவ்வொருவனும் இந்நோய் தன்னை அணுகாமல் செய்துகொள்ள ஓர் வழி உண்டு."

கோபாலன்:—"அவ்வழியாது?"

இராமன்:—"அம்மை வைத்துக்கொள்வதே அம்மைநோயைத்தடுக்கும் சிறந்தமுறையாகும்."

கோபாலன்:—"அம்மை வைத்துக்கொள்ளுதல் என்றுல் என்ன? அதை விவரமாகச் சொல். நான் முதலில் அம்மைவைத்துக்கொள்ள வேண்டும்."

இராமன்:—"நீ ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்குள்ள அதிகாரியிடம் உனக்கு அம்மை வைக்கவேண்டும் என்பதை அறிவி. அவர் ஓர் ஊசியில் சிறிது அம்மைப் பாலை எடுத்து, உன் முன் கைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு இடங்களில்கீறி, அப்பாலே உன் இரத்தத்தில் கலப்பார். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, கீறின

இடங்களில் மட்டும் கொப்புளங்கள் உண்டாகும். பிறகு சுமார் பத்துநாட்களில் அச்சிறங்குகள் சொஸ்தமாகிவிடும்.''

கோபாலன்:—“ஒருவன் அம்மை வைத்துக் கொண்டால் பிறகு அம்மை நோய் ஒருபோதும் அவனை அணுகாதோ!''

இராமன்:—“ஒரு முறை வைத்துக்கொண்டால் சுமார் ஏழுவருஷங்கள் வரையில் அம்மை நோய் அணுகாது. ஆகையால் ஏழு வருஷங்களுக்கு ஒருமுறை அம்மை வைத்துக்கொள்ளுதல் நல்லது. இங்கிலாந்தில் இம்முறையை ஒவ்வொருவீட்டிலும் தவருது அனுஷ்டிக்கிறார்கள். இதன் பலனுக அங்கு இந்நோய் தலைகாட்டுவதே இல்லை. நமது நாட்டில் இம்முறை ஏற்படுவதற்கு முன் ஒவ்வொரு கிராமத்திலும் வருடாவருடம் பலர் இவ்வியாதியால் கொள்ளைகொள்ளப் பட்டார்கள், இப்பொழுது நமது நாட்டில் இம்முறை கையாளப்பட்டு வருவதால் இந்நோய் குறைந்து வருகிறது.

கோபாலன்:—“இராமா! என் தந்தையினிடம் சொல்லி நாளையே என் வீட்டில் எல்லோருக்கும் அம்மை வைக்கும்படி செய்கிறேன். உன்னிடம் இன்று அம்மை நோயைப்பற்றி விவரமாய் அறிந்தேன். போய்வருகிறேன். வந்தனம்.''

---

14. கர்ணன்.

பல்லாண்டுகளுக்கு முன் சந்திர வம்சத்தினர் என்ற ஓர் வகையினர், நமது தேசத்தை ஆண்டு

வந்தனர். அவ்வம்சத்தில் திருதராட்டிரன், பாண்டு என்ற இருசகோதரர்கள் இருந்தார்கள். அவர்களுள் பாண்டு மன்னன், குந்தி போஜ ராஜன் மகளாகிய குந்திதேவி யென்பவளை மணந்தனன்.

குந்தி தேவி கன்னிகையாய் இருக்கையில் ஒரு நாள் இவளுடைய தந்தையிடம் துருவாச முனிவர் வந்தார். இவள் தந்தை, முனிவரை உபசரிக்கும்படி இவளுக்குக் கட்டளையிட்டான். அவ்விதமே இவள் அம்முனிவரை உபசரிக்க,

அவர் மிகக்களிப்புற்று ஓர் மந்திரத்தை இவ ளுக்கு உபதேசித்துச் சென்றனர்.

ஒரு நாள் குந்திதேவி தனது இருக்கையின் மேல் மாடியில் உலாவுகையில் முனிவர் உபதே சித்த மந்திரபலத்தை அறிவோமென்றுஎண்ணி அதை உச்சரித்தனள். உடனே அம்மந்திர தே வதையாகிய சூரியன் அவள் முன் தோன்றினர். சூரியனைக்கண்டவுடன் குந்தி தேவியார், உடல் வேர்த்து, நடுநடுங்கித் திகைத்து நின்றனள். அம்மந்திரத்தின் பலனாக உடனே குந்தி தேவி ஓர் ஆண் மகனை ஈன்றாள். அக்குழந்தை கவச குண்டலங்களுடன் விளங்கிற்று. சூரியன் வர மளித்துச் சென்றான்.

உடனே குந்தி தேவி, ஊரார் நிந்தைக்கு அஞ்சி தனது முன்றானையில் சிறிது கிழித்து அக்குழத்தையை மூடினாள். ஒரு பெட்டியில் வைத்தாள். அப்பெட்டியை அருகிலிருந்த ஆற் றில்விட்டனள். அப்பெட்டி ஆற்று நீர்வழியே மிதந்து அஸ்தினபுரத்தருகில் வந்தது. அச் சமயம் அங்கு நீராட வந்திருந்த ஓர் தேர்ப்பா கன் அப்பெட்டியை எடுத்துத் திறந்து பார்த் தான். அதனுள் அதிக பிரகாசத்துடன் விளங் கின குழந்தை இருக்கக் கண்டான். கடவுளரு ளால் இக்குழந்தை கிடைத்தது என்று சந்தோ ஷங்கொண்டான்.

அச்சமயம் வானத்தில் “கர்ணன்” என்று ஓர்சப்தம் உண்டாயிற்று. அதைக் கேட்டபாகன் அக்குழந்தைக்குக் கர்ணன் எனப் பெயரிட்டு மிக்க பிரியமாய் வளர்த்து வந்தான்.

கர்ணனுக்குத் தக்க பருவம் வந்ததும் நல்ல வித்தைகளைக் கற்று சூரன் ஆனான். இவனது புத்திக்கூர்மையையும், சூரத்தனத்தையும் அறிந்த துரியோதன மன்னன் இவனை அங்க தேசத்து அதிபதியாக்கினான். கர்ணன் இரப்பார்க்கு இல்லையென்று சொல்லாமல் கேட்டவற்றை யெல்லாம் கொடுத்து வந்தான். ஆகையால் "கொடையிற் சிறந்தவன் கர்ணன்" என்னும் பழமொழி இன்றைக்கும் வழங்கி வருகிறது.

சில நாட்களுக்குப் பிறகு, திருதராஷ்டிர புத்திரர்களாகிய துரியோதனாதியருக்கும், பாண்டு புத்திரர்களாகிய பாண்டவர்களுக்கும் கடும்போர் தொடங்கிற்று. அப்போரில் கர்ணன் துரியோதன மன்னனுடைய போர்த்தலைவன் ஆனான். இவனிடம் சில அரிய பொருள்கள் இருந்தன. அவையாவன:-பிறந்தபோதே இவனிடமிருந்த கவசகுண்டலங்கள், இவன் செய்த தருமங்களின் பலனாய் இவனை சூழ்ந்து நிற்கும் தரும தேவதை, நாகாஸ்திரம் முதலியனவாம். இவை மூன்றும் இவனிடமிருக்குமளவில் இவனை வெல்ல யாவராலும் ஆகாது. இதை யறிந்த கிருஷ்ணபகவான் சில சூழ்ச்சிகள் செய்தார். முதலாக குந்திதேவியை கர்ணனிடம் அனுப்பி கர்ணனிடமிருந்த நாகாஸ்திரத்தை அவன் ஒரு முறைக்குமேல் பிரயோகம் செய்யலாகாது என்று வரம் வாங்கிவர அனுப்பினான்.

குந்திதேவியும்கிருஷ்ணனுடையஉத்தரவுக்கிணங்கி கர்ணனிடம் சென்று அவனுடைய

பிறப்பு வரலாற்றைக் கூறினுள். இதைக்கேட்ட கர்ணன் எழுந்திருந்து குந்திதேவியை நமஸ்கரித்தான். குந்தி தேவி இவனைப் பாண்டவர் சார்பில் வரும்படி வேண்டினுள். அதற்கு அவன் " அம்மையே ! உப்பிட்டவனை உள்ளளவும் நினைக்கவேண்டு மன்றே ? தேர்ப்பாகனுல் வளர்க்கப்பட்ட என்னைத் துரியோதனன் நேசித்து அங்கதேச அரசனுகவும் ஆக்கினுன் அவனுக்குத் துரோகம் செய்ய ஒருக்காலும் உடன்படேன்" என்ருன். இதை கேட்ட குந்திதேவி கர்ணனை நோக்கி " என் அருமை மகனே உன்னிடமுள்ள நாகாஸ்திரத்தை அர்ச்சுனன்மீது நீ ஒரு முறைக்குமேல் பிரயோகம் செய்யலாகாது" என்று கோரினுள். கர்ணன் அதற்கு உடன்பட்டு "அன்னுய்! நான் போர்க்களத்தில் இறந்த பிறகு நீ என் சவத்தின்மீது விழுந்து புலம்பி நான் உன்மகன் என்பதை வெளிப்படுத்த வேண்டும்" என்று வேண்டினுன் குந்திதேவியும் அவ்வாறே ஒப்புக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கினள்.

பிறகு கிருஷ்ணன் தேவேந்திரனைக் கர்ணனிடமிருந்து அவனது கவச குண்டலங்களை யாசித்துப் பெற்று வர அனுப்பினுன். தேவேந்திரன் ஒரு அந்தணவேடம் பூண்டு கர்ணனிடம் சென்று கவச குண்டலங்களை யாசித்தான். கர்ணன் உவகையோடு அவற்றை அளித்தான். பின்னும் கிருஷ்ண பகவான் தானே ஒரு பிராமண வடிவம் கொண்டு கர்ணன் முன் சென்று அவனது தருமங்களைத் தானம்வாங்கிச்சென்ருர்.

இவ்வாறு கர்ணனிடம் மூன்று அரிய பொருள்களிருந்தும் துஷ்ட துரியோதனனுடைய சகவாசம் இருந்தமையால் எல்லா வலிமையுமிழந்து போரில் நீதிமானுன அர்ச்சுனன் கையால் கொல்லப்பட்டான். குந்திதேவியும் "கர்ணன் தனது மூத்த பிள்ளை" யென்பதை உலகமறியச் செய்தனள்.

---

15. கனியும் வித்தும்

பூந்தாதுக்கள் கிலத்தலையில் விழுந்து கருப்பெட்டியை அடைந்தால் கருப்பெட்டியிலுள்ள





விதைச் செதில்கள் விதைகளாக மாறுகின்றன என்று முன்பாடத்தில் படித்தீர்களல்லவா?

இதைக் கருப்பெட்டி கருத்தரித்ததுஎன்றுசொல்லலாம். கருப்பெட்டி பருத்து முற்றிக் கனியாகிறது. ஆகையால் கருத்தரித்துப் பருத்து முற்றின கருப்பெட்டியே கனியாய் விளங்குகிறது.

ஓர் கனியில் உள்ளடங்கியிருப்பது விதைகள். விதைகளை அடக்கியிருப்பது விதைக் கவசம் அல்லது தோல். ஆகவே கனியின் இருபாகங்கள் விதைக் கவசமும் விதைகளும் ஆகும்.

விதைக் கவசம் அல்லது கனித்தோலின் தன்மையைக்கொண்டு கனிகளை இருவகையாகப் பிரிக்கலாம். அவரை, வெண்டை போன்ற கனிகளின் விதைக் கவசம் காய்ந்து தோல்போல் கெட்டியாகவிருக்கும். இத்தகையகனிகளை, தோல் கனிகள் என்றுபெயரிடலாம். திராட்சைபோன்ற கனிகளின் விதைக் கவசம் சதைப்பற்றுள்ளதாயிருக்கும். ஆகையால் இதுபோன்ற கனிகளை தசைக்கனிகள் என்னலாம்.

தசைக் கனிகளில் இருவகையுண்டு. விளாம் பழம்போன்ற கனிகளில் விதைக் கவசத்தின் மேற்புறம் ஓடுபோல் கெட்டியாயும் உட்புறம் சதைப்பற்றுள்ளதாயும் இருக்கும். இவ்விதத் தசைக் கனிகளை வெளியோட்டுத் தசைக்கனிகள் என்னலாம். மாம்பழம்போன்றகனிகளின்விதைக் கவசத்தில் மேற்புறம் சதைப்பற்றுள்ளதாயும் உட்புறம் கெட்டியான ஓடுள்ளதாயும் இருக்கும். இம்மாதிரியான தசைக் கனிகளை உள்ளோட்டுத் தசைக்கனிகள் என்று சொல்லலாம்.

கனிகளில் சிலவற்றில் ஒவ்வொரு விதைமட்டும் உள்ள கனிகளும் உண்டு. ஓர் கனியில் பல விதைகள் அடங்கின கனிகளும் உண்டு. விதைகள் உருவத்திலும், வடிவத்திலும் பலவேறுபாடுகளுடன் விளங்குகின்றன. சில விதைகள் உருவத்தில் உருண்டையாயும், மற்றும் சில தட்டையாயும், இன்னும் சில முட்டை வடிவமாகவும் உள. சில விதைகள் பெரிதாய் இருக்கின்றன. மற்றும் சிலவிதைகள் கடுகிற்கும் சிறியனவாயுள.

ஒரு செடியில் அனேக கனிகளுண்டாகி அநேக விதைகள் உண்டாகின்றன. எல்லாம் வேறு இடங்களில் பரவ சாதனமற்றதாய்ச் செடியின் அடியிலேயே விழுந்து முளைக்குமாயின், சிறிதளவு நிலத்தில் எல்லாம் வளரவேண்டிவரும். அவை ஒவ்வொன்றிற்கும் போதுமான ஆகாரம் பூமியிலிருந்து கிடைக்க ஏதுவில்லாமலும், சூரியவொளி கிடைக்காமலும் வளர்ச்சி குன்றி க்ஷீணித்துப்போம். இவ்விதம்ஏற்படாமல் தடுத்துவிதைகள் தாய்ச்செடிக்குவெகுதூரத்திற்கப்பால் பரவப்பல இயற்கை சாதனங்கள் உள்ளன.

வெண்டை போன்ற சில தோல் கனிகள் வெடிப்பதால் விதைகள் சிதறுண்டு தாய்ச் செடிக்கு அப்பால் நாலா பக்கங்களிலும் வெகு தூரத்தில் பரப்பப்படுகின்றன. வேம்பின்கனி போன்றசில கனிகளில் உருசியுள்ள சதை இருப்பதால் பறவைகள் தின்று எச்சமிட்டுப் பலவேறு இடங்களில் பரப்பப்படுகின்றன. எருக்கங்கனி

யிலுள்ள விதைகளில் மயிர்ப் புச்சங்கள் உள. இவை காற்றில் பறந்து பல இடங்களுக்குப் பரவுகின்றன. நெருஞ்சி போன்ற விதைகளில் முட்களிருப்பதால் அவை பிராணிகளின் கால்களில் ஒட்டி வெகுதூரம் பரவுகின்றன. பனை, புன்னை போன்ற கனிகள் நீரில் மிதந்து வேறு இடங்களுக்குப் பரவுகின்றன.

---

16. வேடனும் குரங்கும்.

ஒரு நாள், ஓர் வேடன் காட்டிற்குச் சென்று அங்கிருந்த புள்ளினங்களை வேட்டையாடிக் கொண்டிருந்தான். அச்சமயம் அங்கு ஓர் புலி, அவனை நோக்கி வருவதைக்கண்டு திகிலடைந்து ஓடினான். புலியும் அவனை விடாமல் துரத்திற்று ஆனால் புலியோ வெகுசமீபத்தில் வந்துவிட்டது. வேடன், தான் ஓடும் வழியிலிருந்த ஓர் மரக்கிளையில் உட்கார்ந்திருந்த ஓர் குரங்கைப் பார்த்து "ஓ, வானரமே! என்னைப் புலி துரத்தி வருகிறது. உன் வாலைப் பிடித்துக்கொண்டு நான் மரத்தில் தாவ நீ எனக்கு உதவிசெய்து, உயிர்ப்பிச்சை கொடுக்கவேண்டும். இல்லாவிடில் நான் இறப்பது நிச்சயம்" என்று கெஞ்சினான். குரங்கு மனமிரக்கப்பட்டு தனது நீண்ட வாலைக் கீழே தொங்க விட்டது. வேடனும், உடனே அதன் வாலைப்பற்றிக்கொண்டு மரக்கிளைக்குத் தாவினான்.

வேடன் மரத்தில் ஏறிக்கொண்டான் என்பதையறிந்த புலி, மரத்தடியில் வந்து கீழே படுத்துக்கொண்டது. சிறிது நேரஞ்சென்று புலி குரங்

கைப்பார்த்து, "ஐயா! குரங்காரே, நமது இனத்தாரைவேட்டையாடிக்கொல்வதே தொழிலாகக் கொண்ட இவ்வேடனை மரத்திலிருந்து கீழே தள்ளிவிடு. நான் அவனைக் கொன்று தின்று

நம்மினத்தாருக்கும் நன்மை செய்தவனாவேன்" என்றது. அதற்குக்குரங்கு புலியைநோக்கி "ஐயா! தஞ்சம் என்றடைந்தவன் எவ்வளவு கெட்டவனாகிலும் அவனைக்கைவிடாது காப்பாற்றவேண்டும். நான் அவனுக்கு என்னாலான உதவியைச் செய்தே தீருவேன்" என்றது.

குரங்கு இவ்வாறு கூறியும், புலி மரத்தடியை விட்டு நீங்காமல் அங்கேயே படுத்திருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம், வேடன் தனக்குப் பசி அதிகமாயிருக்கிறது என்று குரங்கிற்குத் தெரிவித்தான். குரங்கு வேடனை, மரக்கிளையில் ஜாக்கிரதையாக உட்கார்ந்திருக்கும்படி சொல்லிவிட்டு, தான் மரத்தின் உச்சிக்கு ஏறி, அங்குபழுத்திருந்த மதுரமான கனிகளைப் பறித்துக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்து உண்ணும்படி செய்தது.

கடும்பசி தீர்ந்த களைப்பினுல் வேடன் தான் சிறிதுநேரம் களைப்பு நீங்க நித்திரை செய்ய வேண்டுமென்று குரங்கிற்கு அறிவித்தான். அதற்கும் அக்குரங்கு அம்மரத்தில் கிளைகளடர்ந்த ஓரிடத்தில் படுக்கவைத்து தூக்கத்தில் அவன் தவறிக்கீழே விழாவண்ணம் தனது வாலினுல் அவனது உடலைக்கிளையோடு சுற்றிப்பிடித்து, காத்து வந்தது. வேடன், தூங்கி விழித்துக் கொண்டதும், குரங்கு தான் சற்றுக் கண்ணயர வேண்டுமென்று எண்ணி வேடனை பத்திரமாயிருக்கச் சொல்லிவிட்டு, ஓர் கிளையில் படுத்துத் தூங்கிற்று. குரங்கு அயர்ந்து நித்திரை செய்யும் சமயம் பார்த்து, வேடனைக்கூவி "ஐயா! நீர் குரங்கை மரத்திலிருந்து கீழே தள்ளிவிட்டால், நான் அதைக்கொன்று தின்று எனது பசிப்பிணியை தீர்த்துக்கொண்டு என்குகைக்குப் போய்விடுகிறேன். பிறகு நீ சௌக்கியமாய் வீடுபோய்ச்சேரலாம் என்று சொல்லிற்று.

நன்றியில்லாத அவ்வேடன் புலியின் வார்த்தைகளைக் கேட்டதும், அயர்ந்து தூங்கிக்

கொண்டிருந்த குரங்கைக் கீழே தள்ளிவிட்டான். குரங்கு, கீழேவிழுவதற்கு முன் மாக்கிளைகள் ஒன்றில் அடிபட்டுத் தூக்கந்தெளிந்து ஒருகிளையைப் பற்றிக்கொண்டு தொங்கிற்று. பிறகு அது தான் முன்னிருந்த இடத்திற்குத் தாவிச் சென்றது. அதைக்கண்ட வேடன் தான்செய்த அபகாரத்தை எண்ணிக் குரங்கு தன்னைப் புலியிடம் தள்ள ஓடி வருகிறது என்று நினைத்துத் திகிலடைந்தான். ஆனால் குரங்கு அவனை ஒரு தொந்தரவும் செய்யவில்லை.

அப்போது புலி குரங்கைப்பார்த்து "ஐயா! குரங்காரே நீர் இவ்வேடனைக் காப்பாற்றினதற்குப் பிரதியாக உன் உயிரைக்கொல்ல நினைத்தான். நம்மினத்தார்க்கே இடர் செய்யும் இவனை இப்போதாவது கீழே தள்ளிவிடு என்றது. அதற்குக் குரங்கு "அடைக்கலம் அடைந்தவர்களுக்கு எவ்விதக் கெடுதியும் செய்யலாகாது. அவன் என்உயிரைக்கொல்ல நினைத்தானாயினும், நான் அவன் உயிரை என் உயிரைக்கொடுத்தாயினும்காப்பாற்றுவேன்" என்றது. இதைக்கேட்ட புலி வெட்கமடைந்து எழுந்திருந்து காட்டிற்கு வேறு இரைதேடப்புறப்பட்டுப் போய்விட்டது. பிறகு வேடன் மரத்தைவிட்டு இறங்கிப் பத்திரமாய் வீடுதிரும்பினான்.

---

17. தோட்ட நத்தை.

தோட்ட நத்தையின் தேகம் வெகு மிருதுவானது. இதன் தோலிலிருந்து ஒருவிதப்பசைப்

பொருள் உண்டாகிறது. இப்பசைப் பொருளு டன் சுண்ணும்பு வஸ்துக்கள் சேர்ந்து அதன முதுகுப்புறமுள்ள ஓடு உண்டாகிறது. இச்சுண் ணும்பு பூமியிலிருந்தும் ஜலத்திலிருந்தும் கிடை



க்கிறது. சில ஊர்களிலுள்ள நத்தையின் ஓடு மெல்லியதாய் இருக்கும். ஏனெனில் அவ்வூர் மண்ணில் சுண்ணும்பு குறைவு. நிலத்தில் அதிகச் சுண்ணும்பு உள்ள ஊர்களிலுள்ள நத்தையின் ஓடு சிறிது கெட்டியாய் இருக்கும்.

இந்தக் கூடுபோன்ற ஓடு நத்தையின் தேகத் தில் தோலோடு தோலாய் ஒட்டியிருப்பதால் இது அதன் தேகத்தின் ஓர் பாகமேயாகும். அபா யம் நேரிடுங்கால், நத்தை தன் உடலை இக்கூட்டி னுட் சுருக்கிக் கொண்டாலும், இக்கூடு நத் தைக்குத்தான் வசிக்கும் வீடு அல்ல. மண்ணட்டை என்று சொல்லப்படும் ஜந்துவும், ஓர் வகை நத் தையே ஆகும். இவ்வகை நத்தைக்கு ஓடு இல்லை.

நத்தையின் தலையில், இருஜோடி உணர்ச்சிக் கொம்புகள் உள. அவற்றில் முன்னுள்ளவை சிறியவை. பின்னுள்ளவை நீண்டவை. பின்

னுள்ளவற்றின் உச்சியில் கண்கள் உள. இவ்வுணர்ச்சிக் கொம்புகளை நீட்டவும் சுருக்கவும் கூடும்.

நத்தையின் வாயிற் பற்கள் இல்லை. ஆனால் அதனுடைய நாக்கு அரம்போன்ற பற்களுள்ள தோலால் மூடப்பட்டிருக்கிறது. இதனால் நத்தை இலை தழைகளைத் துருவித்தின்னும்.

நத்தையின் தேகத்தின் நடுப்பாகம் அதன் முதுகுப்புறமுள்ள கூட்டில் இருக்கிறது. இக்கூட்டிற்குள், சுவாசப்பைகளும் இருதயமும் இரத்தக் குழாய்களும் உள்ளன.

நத்தையின் அடிப்பாகத்தில் காணப்படும் வரைகளே அதன் கால்கள். நத்தை மெதுவாய் நகரும். அது முன்னால் நகருமேயொழிய அதனால் பின்னால் நகர இயலாது. அது ஊர்ந்து செல்லுமிடங்களில் சளி பதார்த்தம் காணப்படும்.

நத்தையில் ஆண், பெண் என்ற இனப்பிரிவு இல்லை. எல்லா நத்தைகளும் முட்டையிடும். நத்தை தன் முட்டைகளைத் தரையில் பள்ளத்தில் இடும். முட்டைகள் சூரிய வெப்பத்தினால் குஞ்சுகள் ஆகும்.

நத்தைகள் சீமையில் மாரிகாலத்திலும், நமது நாட்டில் உஷ்ண காலத்திலும், மாதக் கணக்காகத் தூங்கும். அப்போது அவற்றிற்கு ஆகாரம் தேவையில்லை.

நத்தையினத்திற் பலவகையுண்டு. அவை யாவன:—தரையில் வசிக்கும் தோட்ட நத்தை;

குளத்தில் வசிக்கும் குளநத்தை, காக்காச் சிப்பி முதலியன, கடலில் வசிக்கும் சங்கு, சோழி, முத்துச் சிப்பி என்பனவாம்.

சிலஜாதி ஜலநத்தைகளின் கூட்டிற்கு வாய்ப்புறம் மூடியுண்டு நாம் இராவணன் விழி என்று சொல்லும் பொருள் கடல் நத்தையின் கூட்டின் வாய் மூடியேயாகும். இரட்டைக்



கிளிஞ்சல்கள் உள்ளவை சிப்பியினத்தைச் சேர்ந்தவை. சிப்பியினத்திற்குச் சுவாசப்பைகள் இல்லை. ஆனால் சுவாச இலைகள் உண்டு. கடலில் முத்துச் சிப்பி என்று ஒருவகை சிப்பியுண்டு. இதன் ஓட்டிற்கும் உடலுக்கும் இடையில் பொடி மணல் புகுந்து அருவி பசையோடு சேர்ந்து முத்து ஆகிறது. முத்துச்சிப்பிகள் கடலில் அதிக ஆழமுள்ள இடங்களில் வசிக்காது.



18. ஆகாரமும், ஜீரணமும்.

நமது தேகம் எரிகிறது. அதனால் தேகம் முழுதும் கழிவு பதார்த்தங்கள் உண்டாகின்றன. அக் கழிவு பதார்த்தங்கள் இரத்த ஓட்டத்தின் மூலம் அவற்றைக் கழிக்கும் உறுப்புகளுக்குக் கொண்டுவரப்பட்டு அவ்வுறுப்புகளால் வெளியேற்றப்படுகின்றன. இதனால் தேகவஸ்து நஷ்டம் ஏற்படுகிறது. நமக்குப்பசி, தாகம் உண்டாகிறது. அந்த நஷ்டத்தை ஈடு செய்ய நாம் ஆகாரம் உட்கொள்ளுகிறோம்.

நமது தேகத்திலிருந்து கழிக்கப்படும் பல வஸ்துக்களில், கரியமிலவாயு ஒன்று. கரியும் பிராணவாயுவும் சேர்ந்தது கரியமிலவாயு ஆகும். கரிப்பொருள் நஷ்டத்தை ஈடுசெய்ய கரியைத் தின்னலாமா? தின்னக்கூடாது. ஏன்? அதை ஜீரணிக்கமுடியாது. நமது தேகத்தில் நஷ்டமாகும் வஸ்துக்களை சில பொருள்கள் வைத்திருந்தாலும் அவைஜீரணம் செய்யப்படும் நிலைமையில் இல்லை. ஆகையால் நாம் அவ்விதப்பொருள்களை உண்ணக்கூடாது. நமதுதேகம் எரிவதால் உண்டாகும் தேகவஸ்து நஷ்டத்தை ஈடு செய்யும் சக்தியோடு கூடிய பொருள்களை ஜீரணிக்கக் கூடிய நிலைமையில் அடக்கி வைத்திருக்கும் பதார்த்தமே ஆகாரம் ஆகும்.

நாம் உண்ணும் ஆகாரத்தில், தேகத்தின் அழிவு தேய்வுகளை ஈடு செய்யும்படியான சத்துக்கள் இருக்கின்றன. அவையாவன:—அரிசியில் மாப்பொருளும், பருப்பில்மஸ்தும், எண்ணெய் நெய் முதலியவற்றில் கொழுப்பும், உப்பில் உப்புப்பொருளும் இருக்கின்றன. ஆதலால் நாம் மேற்கூறிய சத்துக்கள் கலந்த கலப்பு ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

நாம் உண்ணும் ஆகாரம் கரைக்கப்பட்டு இரத்தம் உறிஞ்சும்படியான நிலைமையில் வைக்கப்படுவதே 'ஜீரணம்' ஆகும். நாம் உண்ணும் உணவை ஜீரணிக்கச் செய்ய ஒரு குழாய் இருக்கிறது. அதற்கு 'ஜீரணக்குழாய்' என்று பெயர்.

இந்த ஜீரணக்குழாயில் பலபாகங்கள் உண்டு. அவையாவன:-வாய், தொண்டை, ஆகாரக்குழாய், இரைப்பை, சிறுகுடல் ஆரம்பம், சிறுகுடல் பெருங்குடல், மலப்பை, ஆஸனம் முதலியன ஆகும் இந்த ஒன்பது பாகங்களில், வாய், இரைப்பை, சிறுகுடல் ஆரம்பம், சிறுகுடல் முதலிய நான்கு பாகங்களில் மட்டுமே ஜீரண காரியம் நடைபெறுகிறது. ஏனைய பாகங்களில் அக்காரியம் நடை பெறவில்லை.

நமது உணவிலுள்ள ஆகார சத்துக்கள் எதெது எவ்வாறு எங்கு ஜீரணிக்கப்படுகின்றன என்பதை ஆராய்வோம். நமது வாயில் உமிழ் நீர்க் கோளங்கள் உள. இவை உமிழ் நீரைச் சுரக்கின்றன. நமது உணவு உமிழ் நீருடன் கலந்து நன்ருய் பற்களினுல் அரைக்கப்படுகிறது உமிழ் நீர் நமது உணவிலுள்ள மாப்பொருளைச் சர்க்கரையாக மாற்றி ஜீரணிக்கிறது.

இரைப்பையின் சுவர்கள் கெட்டியானவை. இரைப்பை சுருங்கி விரியும் தன்மையுள்ளது. இதில் பல இரைப்பை கோளங்கள் உள. இவை ஜீரண நீரைச் சுரக்கின்றன. இரைப்பைச் சுவர்கள் சுருங்கி விரிந்து பிசைகின்றன. இங்கு ஆகாரத்திலுள்ள மஷ்துப்பொருள் ஜீரணிக்கப்பட்டு இரத்தம் உறிஞ்சும் நிலையில் வைக்கப்படுகிறது.

சிறுகுடல் ஆரம்பத்தில் கல்லீரலிலிருந்து பித்த நீர் வந்துசேருகிறது. நமது உணவில்

இந்நீர் கலந்து ஆகாரத்திலுள்ள கொழுப்பு வஸ்து ஜீரணிக்கப்படுகிறது.

நமது சிறுகுடலிலும் ஓர்வகை நீர் சுரக்கிறது. இங்கு இன்னும் ஆகாரத்தில் ஜீரணிக்கப்படாத பதார்த்தங்களும் ஜீரணிக்கப்படுகின்றன.

நமது பெருங்குடலில் ஜீரண காரியம் நடைபெறவில்லை. ஆனால் ஜீரணிக்கப்பட்ட ஆகாரசத்தை இரத்தம் உறிஞ்சுகிறது. மலப்பையில் சாரமற்ற சக்கை தள்ளப்படுகிறது. இங்கு நமது இச்சைக்குட்பட்ட ஓர் சக்கரத்தசைக் கதவு உண்டு. அது திறக்கப்பட்டு சாரமற்ற சக்கை மலமாக வெளியேற்றப்படுகிறது.

மேலே விவரித்தவாறு ஜீரணமடைந்த ஆகாரம் இரத்தத்தினுல் கிரஹிக்கப்பட்டு தேகமெங்கும் கொண்டுபோகப்பட்டு தேகவஸ்துவாக மாறுகிறது.

---

19. பாணபத்திரன்.

முன்காலத்தில் நமது தமிழ் நாட்டில், சேரர், சோழர், பாண்டியர் என மூவகை வேந்தர்கள் இருந்தார்கள். அவர்கள் முறையே சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்னும் பகுதிகளை ஆண்டு வந்தார்கள். மதுரை, பாண்டி நாட்டின் தலைநகராய் விளங்கிற்று. பாண்டி நாட்டை, வரகுணபாண்டியன் என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்த

வன். தன்னிடத்து வந்த வித்துவான்களுக்கெல்லாம் தகுந்த பரிசுகளை உதவி வந்தான்.

ஒருநாள், வடதேசத்திலிருந்து ஒரு வீணைப் பாடகன் வரகுணபாண்டியனுடைய சபைக்கு வந்தான். அவன் பெயர் ஏமனாதன் என்பது. அவன் வீணையை மீட்டி பாண்டியனது கீர்த்திகளைப் புகழ்ந்து பாடினான். பாண்டியன் மிக்க திருப்தியடைந்து, புலவனுக்கு ஏராளமான இரத்தினாபரணங்கள் பரிசு கொடுத்து, அவனை ஒரு

தனி விடுதியில் இருக்கச் செய்தான். ஏமனுதன் தனக்கு நிகருள்ள யாழ்ப்புலவன் ஒருவருமில்லை யென மதித்துக் கர்வம் கொண்டிருந்தான்.

ஏமநாதனுடைய கர்வத்தை அரசன் அறிந்து தனது அரண்மனை யாழ்ப்புலவனுகிய பாணபத்திரன் என்பானை அழைப்பித்து "பாண, இப்போது வடநாட்டு யாழ்ப்புலவன் ஒருவன் இந்நகர்க்கு வந்துளன். அவனுடனே நீ பாட வல்லையோ?" எனக் கேட்டான். அதற்குப் பாணன் "வேந்தே! தங்களுடைய தயவினுலும், சோமசுந்தரக் கடவுளின் அருளினுலும் அவனேடு பாடி வென்று அவனுடையவிருதுகளைப் பறித்து விடுவேன்" என்று தைரியமாய்ப் பதில் கூறினுன். இதைக்கேட்ட மன்னன் சந்தோஷங் கொண்டு " நீ நாளைவந்து பாடக்கடவை" என உத்தரவு கொடுத்தனுப்பினுன்.

பாணன், தனது வீட்டிற்குத் திரும்பிப்போகும்போது கடைத்தெருவில் ஏமனுதனுடைய சீடர்கள் பாடிக்கொண்டிருப்பதைக் கேட்டான். அச்சீடர்களின் பாட்டின் பெருமையைக் கண்டு ஆச்சரியங்கொண்டான். பந்தயத்தில் எவ்வாறு ஏமநாதனை வெல்ல முடியுமென்று மனங்கலங்கினுன்.

பாணன் அகம்பாவமற்றவன். திடமானதெய்வபக்தி யுள்ளவன். அவனுக்கு, தான் சோமசுந்தரரது அருள் பெற்ருல் எதிரியை வென்று விடலாம் என்ற தைரியம் உண்டாயிற்று. சோம

சுந்தரக்கடவுளின் திருக்கோயிலுக்குச் சென்று "ஒப்பற்றசிவக்கொழுந்தே! உமது அருள்பெற்றவர்க்கு அவமானமில்லை. நான் அரசன் முன்னிலையில் நாளையதினம் ஏமநாதனுக் கெதிரியாக, பாடப்போகும் பந்தயத்தில் எனக்கு வெற்றி கிடைக்கும்படி அருள்புரிய வேண்டும்," எனப் பிரார்த்தித்தான்.

ஈசன் பாணனது பக்திக்கு இரக்கங்கொண்டார். ஓர்விறகு விற்கும் ஆள் உருவங் கொண்டு இடையில் ஓர் கிழிந்த வஸ்திரம் தரித்துக்கொண்டார். தமது திருமுடிமேல் ஓர் விறகு சுமையை ஏற்றிக்கொண்டார். இடது தோளில் ஓர் வீணையை மாட்டிக் கொண்டார். விறகை விலை கூறிக் கொண்டு ஏமநாதன் தங்கியிருந்தவீட்டின் அயல் வீட்டுத்திண்ணையில் விறகு சுமையை இறக்கினார். யாழை எடுத்துச் சுருதி கூட்டிப்பாடினார். ஈசனே பாடுவது என்றால் பாட்டின் திறமையை என்னென்று சொல்வது?

விறகு வெட்டியின் கீதத்தைக்கேட்ட ஏமநாதன் இடியொலி கேட்ட பாம்புபோல் திடுக்குற்றான். தனது வீட்டின் வெளிப்புறம் வந்து பாடுவோன் யாவனெனப் பார்த்தான். அவன் ஓர் விறகு ஆள் என்றறியவே அவனது உடல் சிலிர்த்தது. சற்றுநேரம் பிரமித்து நின்றான். பின் ஒருவாறு மனந்தேறி விறகு விற்போனைக் கூவி "நீ யார்? எந்தஊர்? எங்கு சங்கீதம் கற்றாய்? ஏன் இத்தொழில் பூண்டாய்?" எனக்கேட்டான். அதற்கு, விறகு ஆள்உருக் கொண்ட ஈசன்

ஐயா! பாண்டியன் சபையில் அனேக வித்து வான்கள்உளர். அவர்களுக்கெல்லாம் திலகம் போன்றயாழ்ப்புலவன் ஒருவன் உளன். பாணன் என்பது அவனது பெயர். அவனுக்குப் பல சீடர்கள் உளர். யானும் அவனிடம் சங்கீதம் பயின்றேன். 'ஐயோ! அவன் என் மடமையைக் கண்டு எனக்குக்கொஞ்சமேனும்சங்கீதப்பயிர்ச்சி உண்டாகாது எனக்கூறித் தனது சிஷ்ய வர்க் கத்தினின்றும் என்னை விலக்கி விட்டான். நான் எனது வயிறு வளர்க்க இத்தொழில் கொண் டேன்" என்ருன்.

இம்மொழியைக்கேட்டஏமநாதனுக்கு பயம் உண்டாயிற்று. 'சீடர்களில் கழிபட்டவன் இவ் வளவு வல்லவனுயின் பாணனது சங்கீதத்தேர்ச்சி எத்தகைத்ததோ!" என்று மனம், நடுங்கினன். தனக்கு அரசவையில் மானபங்கம் உண்டாகு மென்றுதீர்மானித்தான். அன்றிரவேபுறப்பட்டு ஒருவருமறியாமல் தன்னூர் நோக்கி ஓடிவிட் டான்.

மறுநாள் காலையில் பாணன் அரசவைக்கு ஏகினன். அரசன் தனது ஏவலாளர்களைக்கூவி சீக்கிரம்ஏமனதனை அழைத்துவரக்கட்டளையிட் டான். அவர்கள் ஏமனதன் தங்கியிருந்த வீட் டிற்குச்சென்ருர்கள். அங்கு அவன் காணப்பட வில்லை. அவர்கள் திரும்பிவந்து இச்செய்தியை மன்னனுக்கு அறிவித்தார்கள். மன்னன் பாணன் மீதுசந்தேகங்கொண்டு அவனை நோக்கி "பாண,

யாது சூழ்ச்சி செய்து எமனுநாதனைக் காணுமற் செய்தாய்?" எனக்கேட்டான்.

பாணன் அச்சமடைந்து, நடுநடுங்கி "அரசே! நான் நேற்று நினதுசபையிலிருந்து வீடுதிரும் புங்கால் நான் சோமசுந்தரக்கடவுளின் ஆலயம் சென்று பணிந்து பிறகு என் வீடு போனேன். நேற்றிரவில் நான் ஒருகனவுகண்டேன். அதில் மதுராபுரிநாதன் தோன்றி 'அப்பனே! உனக் காக ஓர் விறகு வெட்டி உருவம் கொண்டு, ஏம நாதன் வீட்டுவாயில்போய் நின்றுபாடி அவனை ஓடச்செய்தேன், என்று கூறி மறைந்தார்" என் ருன். மன்னனும் பாணனது திடமான தெய்வ பக்தியைக் கண்டு புகழ்ந்தான்.

---

20. பூச்சி இனம்.



பூச்சியினத்தில் பலவகையுண்டு. இவற்றிற் குறிய சில பொது இலக்ஷணங்கள் உள. ஓர் பூச் சியின் தேகம், தலை, மார்பு, வயிறுஎன மூன்றுபிரி

வினைகளையுடையது. அதற்குக் கால்கள் ஆறு. இறக்கைகள் நான்கு. கால்களும் இறக்கைகளும் மார்பு புறமிருந்து கிளம்புகின்றன.

பூச்சியின் தலையில் இரு உணர்ச்சிக் கொம்புகள் உள. இவற்ருல் அது ஸ்பரிசம், வாசனை முதலியவற்றை உணரும். ஓர் பூச்சியின் இரு கண்களும் கலப்புக்கண்கள் ஆகும். நூற்றுக்கணக்கான சாதாரணகண்கள் சேர்ந்து ஓர் கலப்புக் கண்ணுகும். தேகமுழுமையும் சுவாசக்குழாய்கள் உள. அக்குழாய்கள் தேகத்தின் மேல் வெளிப்புறம் திறந்திருக்கும்.

புஷ்பங்களிலிருந்து தேனைப்பருகி ஜீவிக்கும் பூச்சிகளுக்குகுழல் நாக்கு உண்டு. பிறபிராணிகளின் இரத்தத்தை உறிஞ்சி வாழும் பூச்சிகளுக்கு வாயில் குழல் நாக்குடன் சில குத்துக்கோல்களும் உண்டு. இரத்தம் உறிஞ்சும் பூச்சிகள் குத்துக் கோல்களால் ஓர் பிராணியின் தேகத்தைக் குத்தி இரத்தத்தை வெளிப்படுத்தி குழல் நாக்கினுல் உறிஞ்சும். மரங்களைத் துளைக்கும் பூச்சிகளுக்கு வாயில் குழல் நாக்காவது குத்துக்கோல்களாவதுகிடையாது. ஆனுல் அரம்போன்ற இருபற்கள் உண்டு.

பூச்சிகள் முட்டையிடும். முட்டைகள் கடுகினும் சிறியனவாயிருக்கும். குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவருங்காலத்தில் விபரீத மாறுபாடுகளைக்காணலாம். இவ்வித விபரீதமாறுபாடுகளை அறிய ஓர் வண்ணுத்திப் பூச்சியின் முட்டையிலிருந்து வெளிவரும் பூச்சியின் மாறுபாடுகளைக்



கவனிப்போம். சில நாட்களுக்குப் பிறகு முட்டையிலிருந்து கம்பளிப்புழு உண்டாகும். இப்புழு வடிவத்தில் நீண்டிருக்கும். இதன் உடல் பல வளையங்களால் ஆனது. இப்புழுவிற்கு இரண்டு கண்கள் உண்டு. வாயில் பற்களும் தலைமீது இரண்டு கொம்புகளும் உள.

இப்புழுவின் உடலின் முதல் வளையம் தலை. இரண்டாவது, மூன்றுவது, நாலாவது வளையங்களில் மூன்று ஜோடி பூச்சிக்கால்கள் உள. இக்கால்கள் நடப்பதற்கு உதவா. அடுத்த இரண்டு வளையங்களில் கால் இல்லை. அடுத்த நான்கு வளையங்களில் நான்கு ஜோடி ஒட்டுக் கால்கள் உள. இவை தான் நடக்க உதவும். மீதியுள்ள வளையங்களில் கால்கள் இல்லை. படத்திலுள்ள ஓர் புழுவின் வளையங்களையும் கால்களையும் நன்ருய்க் கவனித்துப் பாருங்கள்.

இப்புழு இலைகளை அபரிமிதமாகத்தின்னும். அதிகமாய் உண்பதால் பருத்துத் தோலுரிப்ப

தும் உண்டு. இப்புழு இவ்வாறு சில நாள் இலைகளைத் தின்று கொழுத்துப் பிறகு அமைதியாய்ப் படுத்து உறங்க இடம் தேடும். பிறகு தன் வாய் எச்சலினின்றும் ஓர் கூடுகட்டிக்கொண்டு அதனுள் படுத்து உறங்கும். சில நாட்களுக்கெல்லாம் கூட்டில் உறங்கும் இப்புழுவின் தலைப்புறம் வெடித்து ஓர் குழவிப்புழு வெளிவருகிறது. இக் குழவிக்கு வாய் கண்கள் முதலியன இல்லை. ஆனால் உணர்ச்சி மட்டும் உண்டு. பின்னும் சில நாட் சென்ற பிறகு இக்குழவி வெடித்து ஓர் அழகிய வண்ணாத்திப்பூச்சியாக வெளி வந்து பறக்கும். இப்போது இப்பூச்சிக்குப் பற்கள் இல்லை. இலைகளையும் தின்னாது.

---

21. கபீர்தாசர்.

முன்னொரு காலத்தில் ஓர் மகம்மதியன் கங்கா நதியில் ஒரு நாள் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும் போது அந்நதியில் பெருங்கிளிஞ்சலொன்று மிதந்து வரக்கண்டான். அவன் அதை எடுத்து பிளந்து பார்த்தான். அதில் ஓர் அழகிய குழந்தையிருப்பதைக் கண்டான். அக்குழந்தையை வீட்டிற்கு கொண்டு போய் தனது மனைவியிடங் கொடுத்தான். அவள் அதை அன்புடன் ஏற்று இன்புடன் வளர்த்தாள். அப்பிள்ளைக்கு கபீர் எனப்பெயரிட்டார்கள். கபீர் நாளொரு மேனியும் பொழுது ஒருவண்ணமுமாய் வளர்ந்தார். கபீருக்குத்தக்க பருவம் வந்தவுடன் திருமணமும் செய்வித்தார்கள்.

கபீரை வளர்த்த மகம்மதிய குடும்பத்தாருக்கு நெய்தல் ஜீவனத்தொழிலாயிருந்தது. கபீரின் தாய் அவரை நெய்தல் தொழில் செய்யும்படி தூண்டியும் அவர் இராம நாமத்தையே உள்ளத்தில் நினைத்துக்கொண்டு வாளாயிருந்தனர். தாய் அவரை தண்டிக்க ஆரம்பித்தாள். பிறகு

அவர் தினந்தோறும் துணி நெய்து வந்தார். ஒரு நாள் நெய்த துணியைத் தாய் கபீரிடம் கொடுத்து வீதியில் விற்றுவரும்படி அனுப்பினாள். அவர் துணியை எடுத்துப்போய் ஓர் இடத்தில்

உட்கார்ந்து தான் துணிவிற்க வந்ததை மறந்து இராமனைத் தியானித்துக் கொண்டிருந்தார்.

மாலைப்பொழுது வந்ததும் துணி விற்கவில்லை. தாய் கோபிப்பாள் என்ற பயம் அவருக்கு உண்டாயிற்று. வீட்டுற்குத்திரும்பி போகாமல் அங்கு அருகிலிருந்த ஓர் பாழ்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார். இராமபிரான் ஓர் விருத்த வேதியர் வேடம் பூண்டு கபீர் முன் சென்று "ஐயா எனக்கு குளிர் அதிகமாக இருக்கிறது. எனக்கு ஓர் போர்வை தரவேண்டும்" என யாசித்தார். உடனே கபீர் தான் விற்கக் கொண்டு வந்த புதுத் துணியில் ஒரு பகுதியைக் கிழித்துக் கொடுத்தார்.

பின்பு இராமபிரான் சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பக்கிரி வேடம் பூண்டு ஓர் போர்வை தரும்படி கபீரைக் கேட்டார். கபீர் மீதியிருந்த புதிய துணியை பக்கிரிக்குக் கொடுத்து விட்டார்.

போர்வையை பெற்றுக்கொண்ட பக்கிரி கபீர் வீட்டுற்குச்சென்று "அம்மையே! நீங்கள் உங்கள் மகனிடம் விற்பதற்குக் கொடுத்த புதிய துணிகளையெல்லாம் தானம் செய்துவிட்டான். இதோ பாரும் எனக்கும் ஓர் துணி கொடுத்தான். அவன் வீடு திரும்பாமல் அங்கேயே ஓர் பாழ் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறான். என்னுடன் வந்தால் நான் அவன் இருக்குமிடத்தைக் காட்டுவேன்" என்றான். தாய் அப்பக்கிரியுடன் கபீர் உட்கார்ந்திருந்த வீட்டிற்குச் சென்று "எடா;

மூடா; நான் விற்கக்கொடுத்த துணியைத்தானம் செய்து விட்டாயா? என்று கேட்டாள். அதற்குக் கபீர் ஒன்றும் பதிலளிக்க வில்லை. பக்கிரி "அம்மையே அவனை அடித்தாலல்லது உண்மை கூற மாட்டான். இதோ என்னிடம் ஓர் பிரம்பு இருக்கிறது. இதை வாங்கி அவனைப் புடைக்கவேண்டும்" என்றான். தாயும் அவ்வாறே அவனை அடிக்க அவ்வடி பக்கிரியின் முதுகில் பட்டது. பக்கிரி தனது முதுகில் பட்ட அடிகளைத்தாய்க்குக் காட்டி அடிப்பதை நிறுத்தச் சொல்லியும் அவள் நிறுத்தவில்லை. உடனே பக்கிரி வேடங்கொண்டிருந்த இராமபிரான், ஜானகியுடன் எதிரில் தோன்ற கபீர் அவரது திருவடிகளைப்பற்றி விடாதுபிடித்துக் கொண்டார். தாய் மனமகிழ்ந்து "அப்பனே! உன்னால் இராமனையும் ஜானகியையும் காணும் பாக்கியம் பெற்றேன்" என்றுகூறிக் கபீரைக் கட்டியணைத்து வீட்டிற் கழைத்துச் சென்றாள்.

சில நாட்களுக்கெல்லாம் கபீரின் தாயும் தந்தையும் இறந்தார்கள். அவர் தனது இல்லாளுடன் இல்லறம் நடத்தி வந்தார். அவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு கமால் என்பது பெயர். ஒரு நாள் அஸ்தமன வேளையில் மூவர் கபீர் வீட்டிற்கு அதிதிகளாக வந்தார்கள். இவர்களுக்கு அன்னமிட வேண்டுமென்று கபீர் தனது இல்லாளிடம் கூறினார். அவள் வீட்டில் அரிசியில்லாததால் எவ்விடமாவது சென்று கொஞ்சம் அரிசி திருடிவரக் கூறி

ளுள். கபீரும் கமாலும் பூட்டியிருந்தஒர் கடைக்குச் சென்று அரிசியை திருட, கன்னம் வைத்தார்கள். கமால் உள்ளே புகுந்து களவாடி தந்தையிடம் கொடுத்து திரும்புகையில் கடைக்குச் சொந்தக்காரச்செட்டி கமாலின் காலைப்பிடித்துக்கொண்டான். உடனே கமால் தன் தகப்பனைத் தனது தலையை வெட்டிக்கொண்டு போகுக வென கபீர் அவ்வாறே மகன் தலையைவெட்டி அரிசிக்கூடையில் வைத்துக் கொண்டு வீடுசேர்ந்தார். நடந்ததை மனைவிக்கு அறிவித்தார். மனைவி துக்கங் கொண்டாள். பிறகு ஒருவாறு தேறி அரிசியைச் சமைத்து விருந்தினர்களுக்கு அன்னமிட்டாள்.

பொழுது விடிந்தது. செட்டி நடந்த செய்தியை அரசனுக்கு அறிவித்தான். அரசன் சவத்தைக் கழுவேற்றக் கட்டளையிட்டான். அரசன் ஆணைப்படி சேவகர்கள் சவத்தைக் கழுவிலேற்றினார்கள். அச்சமயம் கபீரும், அவர் மனைவியும் அதிதிகள் மூவரும் அங்கு வேடிக்கை பார்க்கச் சென்றார்கள். சவம் அதிதிகளைக் கண்டு கைகூப்பியது. உடனே அதிதிகள் கபீரை நோக்கி "ஐயா எங்களை சவம் கும்பிடுவதின் காரணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு கபீர் இறந்தவன் நல்ல பக்தனாய் இருக்கவேண்டும். ஆகையால் தான் பக்தர்களைக் கண்டவுடன் அவனுடைய சவம் வணங்குகிறது" என்றார். அதிதிகள் "இவன் யார்?" எனக்கேட்க, கபீர் உண்மையான விருத்தாந்தத்தைக் கூறினார். உடனே அவர்கள் கபீரைத்தலையைக் கொண்டுவரச் சொல்லி முண்

டத்தின் மீது பொருந்தி "உயிர் பெறுக" என்றார்கள். உடனே கமால் பிழைத்து எழுந்தான். கொஞ்ச நாளைக்கெல்லாம் கபீர் மிக்கசிரமத்துடன் இராமநந்தர் என்னும் ஓர் பெரியாருடைய சிஷ்யராகி அவரிடம் கிருஷ்ண நாமத்தை உபதேசம் பெற்று ஓர் பெரிய பாகவதராய் விளங்கினார். அன்று முதல் அவருக்கு கபீர் தாசர் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

---

22. சிறுத்தொண்டர்.

தஞ்சை ஜில்லாவில் திருச்செங்காட்டங்குடி என்று ஓர் சிறிய கிராமம் உண்டு. அதில் வெகு நாளைக்குமுன் பரஞ்சோதி என்று ஒருவர் இருந்தார். அவர் ஓர் அரிய சிவபக்தர். அவர் இடைவிடாது சிவனையே தியானம் செய்து கொண்டு இருப்பார். ஒவ்வொரு நாளும் ஒரு சிவபக்தருக்காவது அன்னம் இட்ட பிறகுதான் அவர் புசிப்பார். அவர் அடியார்க்குச் சிறியராய் இருந்து தொண்டு செய்து வந்ததால் அவருக்குச்சிறுத்தொண்டர் என ஓர் மறுப்பெயர் உண்டு.

தொண்டர் ஒரு நங்கையை மணந்தார். அவள் பெயர் வெண்காட்டு நங்கை என்பது. அவள் மிக நற்குணமுள்ள உத்தமி. தனது கணவனே கடவுள் என்ற எண்ணம் கொண்டவள். இருவரும் ஒருமனப்பட்டுத் தினந்தோறும் சிவனைத் தொழுது சிவனடியார்க்கு அன்னமிட்டு வாழ்ந்தனர். இவர்களுக்கு ஈசன் அருளால் ஓர்

ஆண் மகன் பிறந்தான். அவனுக்கு அவர்கள் சீராளன் எனப் பெயரிட்டார்கள்.

ஒரு நாள் ஈசன் சிறுத்தொண்டரின் பக்தியை உலகத்தாருக்குக் காட்ட எண்ணினார். ஓர் சிவனடியார் வேடம் பூண்டார். தொண்டரின் இல்லம் புகுந்தார். அச்சமயம் தொண்டர் வீட்டில் இல்லை. அவர் அடியாரைத்தேடி அழைக்க வெளியே போயிருந்தார். சிவனார் தொண்டரின் மனைவியை நோக்கி "அம்மையே! மெத்தப் பசிக்கின்றது. உன் கணவன் எங்கே? என்று

வினவினர். அதற்கு அவ்வம்மை "ஐயனே அடியாரைத்தேடி அழைக்க வெளியே போயிருக்கிறார். சற்று உட்காருங்கள், அன்னம் புசியுங்கள். இதோ வந்துவிடுவார்" என்றாள். அதற்குச் சிவனார் "நான், புருஷன் வீட்டில் இல்லாதகாலத்தில் புசிக்கமாட்டேன். இவ்வூர் கோவிலில் உள்ள அகத்தி மரத்தடியில் தங்கியிருக்கிறேன் உன் புருஷன் வந்த பிறகு நான் வருவேன்" என்று சொல்லிப் போய்விட்டார்.

அடியார் சென்று சற்று நேரத்திற்கெல்லாம் தொண்டர் வெளியேயிருந்து வந்தார். தன் மனைவியை நோக்கி "ஐயோ! என்ன செய்வேன் இன்று சிவனடியார் ஒருவரையும் காணேன்" என்று கூறி வருந்தினார். அதற்கு, அந்நங்கை "நாதா! வருந்தாதீர். சற்று முன்பு இங்கு ஒரு அடியார் வந்தார். நான் அவரை அன்னம் புசிக்கும்படி வேண்டினேன். அவர் புருஷனில்லாத வீட்டில் புசிக்கலாகாதென்று மறுத்து, கோயிலிலுள்ள அகத்தி மரத்தடியில் தங்கியிருப்பதாகக் கூறிச் சென்றார்" என்றாள். அச்செய்தியைக் கேட்ட தொண்டருக்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று. உடனே, அவர் கோயிலுக்கு, விரைந்தோடினார். அங்கு சிவனடியாரைக் கண்டவுடனே கீழே விழுந்து அவரை நமஸ்கரித்தார். அவரைத் தனது வீட்டிற்கு வந்து உண்டு போகும்படி வேண்டினார். அதற்குச் சிவனார் "பக்தா! எனக்கு வேண்டிய உணவு அளிக்க உம்மாலாகாது" என்றார். அதற்குத் தொண்டர்,

"ஐயனே உமக்குத்தேவையான உணவு யாது? அது எவ்விதம் வேண்டுமோ அவ்விதம் அளிக்க நான் சித்தமாயிருக்கிறேன்" என்றார். அதற்குச் சிவனார் "அன்பா! நான் ஆறு மாதத்திற்கு ஒரு முறையேதான் உண்ணுவது வழக்கம். அதற்கு ஆண்பிள்ளையைக் கறியாய்ச் சமைக்கவேண்டும். அப்பிள்ளை வீட்டிற்கு ஒரே பிள்ளையாயும், ஐந்து வயதிற்கு அதிகப்படாமலும், வித்தையிற் சிறந்தோனாகவும் இருக்கவேண்டும். அப்பிள்ளையைத் தாய் பிடிக்கத் தந்தை கழுத்தைஅறுத்து பிறகு கறி சமைக்கவேண்டும்" என்றார். தொண்டர் இதற்கு இசைந்து வீடு திரும்பினார். மனைவியிடம் அடியார் விரும்பிய உணவை கூறினார். அவ்வம்மையாரும் அவ்வாறு சமைக்க ஒப்பினாள். இருவரும் சிவனடியாரைத் திருப்திசெய்வதைவிடப் பிள்ளை பெரிதல்லவென்று நினைத்தார்கள். தொண்டர் பள்ளிக்குச் சென்றிருந்த குழந்தையை அழைத்துவந்தார். தாய் அவனை இறுகப் பிடித்துக்கொண்டாள். தந்தை அப்பாலன் கழுத்தை வாளால் அறுத்தார். பிறகு அப்பிள்ளையை நங்கையார் கறியாக சமைத்தாள்.

அடியாருக்கு வேண்டிய உணவு தயாரானவுடன், தொண்டர் அவரிடம் சென்று அவரது அடிகளை வணங்கி "சுவாமி! தங்கள் திருஉள்ளப்படியே உணவு சித்தமாய் இருக்கிறது. எழுந்தருள வேண்டும்" என்றார். சிவனார் அதற்கு இசைந்து வந்து தொண்டரைப் பார்த்து

"அன்ப! நீரும் என்னுடன் உண்ணவேண்டும்" என்றார். அதற்கும் தொண்டரும் சம்மதித்தார். இருவரும் உண்ண உட்கார்ந்தார்கள். திரும்பவும் அடியார் தொண்டரைக்கூவி "பக்தா! உமது பிள்ளையையும் உண்ண அழையும்" என்றார். அதற்குத் தொண்டர் "என்புதல்வன் இப்போது இங்கு வரச் சந்தர்ப்பமில்லை" என்று கூறினார். உடனே அடியார் பிள்ளையில்லாமல் புசிக்கமறுத்தார். தொண்டர், நடுநடுங்கி எழுந்து வெளியே சென்று தான் இடைவிடாது தியானிக்கும் சிவனை மனதில் வேண்டி "சீராளா! என்னருமைப்புதல்வனே! நீ வராவிடில் அடியார் உண்ணமாட்டேன் என்கிறார். உடனே ஓடிவா" என்று கூவினார். ஈசனருளால் சீராளனும் ஓடி வந்தான். தொண்டர் அவனை உள்ளே அழைத்துச் சென்றார். அதற்குள் அடியார்மறைந்துவிட்டார். சமைத்திருந்த பிள்ளைக்கறியும் மறைந்திருந்தது. தொண்டரும், மனைவியாரும் சீராளனுடன் மயங்கி நிற்க பரமசிவனார் பார்வதி தேவியுடன் இடப வாகனத்தின் மீதேறிவந்து, தொண்டருக்குக் காட்சி தந்து அவரைக் குடும்பத்தோடு கைலாயத்துக் கழைத்துச் சென்றார்.

23. பறவைகளின் வகை.

எல்லா பறவைகளுக்கும் உடல் மீது சிறகு போர்வையும், கொம்பு வஸ்துவினால் ஆன அலகும், ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்களும்

உண்டு என்பதை முன் வகுப்பில் அறிந்தோம். பறவைகளின் ஆகாரம் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடி அவற்றின் அலகுகளும், விரல்களும் அமைந்திருப்பதைக் கவனித்து அவற்றைப்பல வகைகளாகப்பிரிக்கலாம்.

புருவைப்போன்ற தானிய பக்ஷிணிகளின் அலகுகள் குட்டையாயும், சற்றுக் குவிந்தும் இருக்கும். இவ்வித அலகமைப்பினுல் அவற்றிற்கு தானியங்களை உமி நீக்கி உண்ணச்சாதகம் உண்டு. கால்களில் முன்புறம் மூன்று விரல்களும் பின் புறம் ஒரு விரலுமாய் அமைந்திருக்கும். நகங்கள் சிறியன.

கழுகு, பருந்து, கருடன், இராஜாளி முதலியன மாமிஸ பக்ஷிணிகள். இவற்றின் அலகுகள் பருத்து வளைந்து கூர்மையாக இருக்கும். கால்

விரல்கள் முன்புறம் மூன்றுபின்புறம் ஒன்றுமாய் அமைந்திருக்கும். நகங்கள் நீண்டு கூர்மையாக அமைந்திருக்கும். இவ்வகைப் பறவைகள் தங்கள் அலகினுலும் நகங்களினுலும் வேறுபிராணிகளை வேட்டையாடிப் பிடித்துக் கிழித்துத் தின்னும். இறக்கைகள் விசாலமாய் நீண்டிருக்கும். அமெரிக்காவிலுள்ள காண்டார் என்றஓர் வகை கழுகின் இறக்கையின் நீளம் சுமார் 9 அடியிருக்கும். இவ்வினப்பட்சிகள் தங்கள் இரையைக் கால்களால் தூக்கும். இவ்வினத்தைச் சேர்ந்த சாகுருவி, கோட்டான் முதலியவற்றிற்கு இரவில் நன்ருய்க் கண்தெரியும். இவை இரவில் வேறு பிராணிகள் அயர்ந்திருக்கும்போது அவற்றைப் பிடித்துத் தின்னும்.

சிலபறவைகள் பூச்சிகளைத் தின்றும், புஷ்பங்களிலுள்ள தேனைப் பருகியும் ஜீவிக்கும். பூஞ்சிட்டு என்ற பட்சியின் அலகு மெல்லியதாய் ஊசி போல் நீண்டு வளைந்திருக்கும். புஷ்பங்களிலிருந்து தேனைப் பருக இவ்வித அலகமைப்பு சாதகமாய் இருக்கிறது. தைலங்குருவிபோன்ற பூச்சி பக்ஷிணிகளில் வாய் பெரியதாயும் அலகு குருகியும் இருக்கும். இரு தாடைகளிலும் மயிர்க்கத்தைகள் உண்டு. இவை வாயைத் திறந்துகொண்டே பறக்கும். பறக்கும்போது பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். இவை பூமியை ஒட்டியே பறக்கும். கூட்டம் கூட்டமாய் வசிக்கும்.

சில பறவைகள் மரங்களில் தொத்தி ஏறும். இப்பறவைகள் தொத்தும் பறவைகளாகும். கிளி

யம், மரங்கொத்தியும் மரங்களில் தொத்தி ஏறும். கிளியின் கால்விரல்கள் முன்னால் இரண்டும் பின்னால் இரண்டுமாய் இருக்கும். அதன் அலகு குட்டையாய் வளைந்து கூர்மையாக விருக்கும். இவ்வித அலகமைப்பு கொட்டைகளை உடைத்துத் துருவித்தின்ன சாதகமாய் இருக்கிறது.

கிளியின் நாக்கு குட்டையாய் தடித்து இருக்கும். பேசப் பழக்கலாம். மரங்கொத்தியின அலகு நீண்டு கூர்மையாயிருக்கும். இது மரத்தைக் கொத்தி அதனுள்ளிருக்கும் பூச்சிகளைப் பிடித்துத்தின்னும். இதன் நாவின் நுனியில், ஈட்டி போல் வளைந்த முள் இருக்கிறது. இதனால் மரத்திலுள்ள பூச்சிகளைக் குத்தியிழுக்கும்.

மைனு அடைக்கலங் குருவி முதலியன தத்தும் பறவைகள் ஆகும். இவைகள் தத்தி ஓடும் இவற்றின் காலில் முன்னால் மூன்று விரல்களும் பின்னால் ஒரு விரலும் உண்டு. அலகு குட்டையாய் இருக்கும்.

கோழி, மயில்போன்ற கிண்டும் பறவைகளின் கால்கள் தடித்திருக்கும். நகங்கள் கெட்டியானவை. நகங்களால் தரையைக் கிண்டும்.

இவை தானியங்களையும், பூச்சிகளையும் தின்னும். இவற்றிற்கு உடலுக்கேற்ற இறக்கைகள் இல்லை. ஆகையால் இவற்றால் அதிகமாய்ப் பறக்க இயலாது.

அன்னம், வாத்து, நீர்வாத்து, குள்ளவாத்து முதலியன நீந்தும்பறவைகள் ஆகும். இவற்றின் கால் விரல்களுக்கிடையில் தோல் படர்ந்திருக்கும். இதனால் இவற்றிற்கு நீந்தச் சாதகம் உண்டு, இவை மீன், தவளை முதலியவற்றைத் தின்னும்.

நாரை, கொக்கு முதலியன நீரில் நடக்கும் பறவைகள் ஆகும். இவற்றிற்கு கால்கள் நீளம். விரல்களுக்கிடையில் தோல் படர்ந்திருக்காது. கழுத்து நீளம், அலகு ஈட்டிபோன்றது. இவை மீன், தவளை, பூச்சி முதலியவற்றை அலகினால் குத்திப் பிடித்துத் தின்னும்.

தீக்கோழி ஓடும் பறவையினத்தைச் சேர்ந்தது ஆகும். இதன்கால்கள் தடித்து நீண்டிருக்கும். கழுத்து மிக நீளம், காலில் இருவிரல்கள் உண்டு, இறக்கைகள் மிகக் குட்டை. ஆகையால் இதனால் பறக்க இயலாது. ஆனால் இது ஓடும் போது தனது இறக்கைகளை அடித்துப் போவதால் இதன் வேகம் அதிகரிக்கிறது.

---

24. ஊர்வன.

ஊர்வன இனத்திற்கு உடல் மீது செதிற் போர்வையுண்டு. செதில்கள் தலைப்புறமிருந்து

வால்புறம்நோக்கிஒன்றையொன்றுமூடி அமைந்திருக்கும். இவ்வினப் பிராணிகளின் தேகத்தில் எலும்புகள் உண்டு. இவற்றின் மண்டையோட்டில் மேல்தாடை கீழ்த்தாடையோடு சேர்த்துப் பொருத்தப்பட வில்லை. மேலும் இவற்றிற்கு வெளிக்காதுகள் இல்லை. உட்காதுகள் உண்டு.





ஊர்வன இனத்தில் நான்கு வகையுள்ளன. அவையாவன:—பல்லி வகை, முதலை வகை, ஆமைவகை, பாம்புவகை என்பனவாம்.

வீட்டுப் பல்லி, மரப்பல்லி, உடும்பு, அரணை, பச்சோந்தி முதலியன பல்லிவகையைச் சேர்ந்த பிராணிகள் ஆகும். பல்லிக்கு வால் நீளம். அதன் வாயில் பற்கள் உண்டு. அதன்கால்விரல்களில் நகங்கள் உண்டு. விரல்களின் உட்புறத்தில் ஒட்டுறுப்புகள் உள. ஆகையால் பல்லி வழவழப்பான சுவர்களின் மீதும் ஏறுகின்றது.

முதலைக்கு முதுகில் எலும்பு சிப்பிகள் உள. ஆகையால் முதலையின் முதுகில்குண்டால் அடித்

தாலும் இறக்காது. விலாவில் அடிபட்டால் இறந்துபோம். முதலையின் வாலில் சுடரான செதில்கள் மேனேக்கியும் பக்கவாட்டிலும் இருக்கின்றன. முதலையின் பாதத்தில் சிறிது தோலடியுண்டு. இவ்வித அமைப்பால் அதற்குத் தண்ணீரில் நீந்த சாதகம் உண்டு.

ஆமைக்கு எலும்பினுலாகிய ஒரு கெட்டி ஓடு உண்டு. இதற்குள் அது தனக்கு அபாயம் நேரிடும்போது தனது கால், தலை முதலியவற்றைச் சுறுக்கி மறைத்துக்கொள்ளும். ஆமையின் வாயில் பற்கள் இல்லை. ஆனுல் கொம்பு வஸ்துவினுலான அலகு உண்டு. ஆமையின் பாதம் தட்டையாய் தோலடியுடன் அமைந்திருக்கும். இவ்வித அமைப்பு அதற்குத் தண்ணீரில் நீந்த சாதகத்தைத்தருகிறது.

பாம்பின் உடலில் சுமார் முந்நூறு சிறுமுதுகெலும்புகள் ஒன்ரோடொன்று பந்துக்கிண்ணப் பொருத்தத்தால் இணைக்கப்பட்டிருக்கின்றன ஆகையால் அதன் தேகத்தைப் பலவிதமாய் வளைக்கச் சாதகம் உண்டு. பாம்பிற்குக் கால்கள் இல்லை. அதன் விலா எலும்புகள் ஒன்ரோடொன்று மார்புப்புறம்சேராமல்வளைந்துபரந்து நிற்கின்றன. இவ்வித அமைப்பு அதற்கு ஊர்ந்து நகரச் சாதகத்தைக் கொடுக்கிறது.

பாம்பு காலாகாலத்தில் சட்டை உரிக்கும். அக்காலத்தில் அதற்குக் கோபம் அதிகம். பாம்பின் காதுத் துவாரங்கள் கண்ணோடு சேர்ந்து அமைந்திருக்கின்றன. ஆகையால் அதற்குக் கட்செவியன் என்ற ஓர் மறுபெயர் உண்டு.

பாம்பின் பற்கள் யாவும் உள்நோக்கி வளைந்திருக்கும். இப்பற்களால் இரையை அரைக்கவாவது வெட்டவாவது சாதகம் இல்லை. ஆதலால் பாம்பு தனது இரையை அப்படியே விழுங்கும். மேலும் பிடித்த இரையை பற்கள் நழுவிப்போகாது காக்கும். விஷப்பாம்பிற்கு மேல்வாயில் இரண்டு கூரிய, வளைந்த விஷப்பற்கள் உண்டு. இவ்விஷப்பற்களின் நடுவில் துவாரமுண்டு. இத்துவாரம் பற்களின் முனையில் பக்கவாட்டில் முடியும். விஷப்பற்களின் அடிப்பாகம் தசையால் அமைந்த விஷப் பையோடு சேர்ந்திருக்கும். விஷப்பாம்பு கடித்த பற்களை சற்று முன் தள்ளும். அப்பொழுது கடித்தவிடத்தில் சிறிது இடைவெளி யுண்டாகும். விஷப் பற்களின் அடியிலுள்ள தசைகள் அழுத்தப்படும் விஷப்பையிலிருந்து விஷம் சுரந்து புண்ணில் கலக்கும்.

விஷப்பாம்புகளின் தலை அகன்று நுனி சிறுத்து இருக்கும். நாகம், கருநாகம், விரியன், சுருட்டை பச்சைப்பாம்பு, கட்டுவிரியன், கொம்பேறி மூக்கன் முதலியன விஷமுள்ள பாம்புகள் ஆகும். நாகப்பாம்பு படம் எடுக்கும். அதன் கண்களுக்கு இடையில் நாமம்போன்ற குறியுண்டு.

ஊர்வன இனத்தில், பல்லி, ஆமை முதலியன சிறு பூச்சிகளைத் தின்னும். முதலை, பாம்பு முதலியன மீன், தவளை, சிறு பக்ஷிகள் முதலியவற்றைத் தின்னும். ஊர்வன இனம் முட்டையிடும். ஆனால் அவ்வினப்பிராணிகளுக்கு அடை

காத்துக் குஞ்சுபொரிக்கத் தெரியாது. பூமியின் வெப்பத்தினாலும், சூரியவெப்பத்தினாலும் முட்டைகள் குஞ்சுகளாகும். பாம்பு முட்டையிட்ட இடத்தையே வட்டமிடும்.

---

25. அரிச்சந்திரன்.

பண்டைக் காலத்து அரசர்களில், சூரிய குலத்தார், சந்திரகுலத்தார் என இரு திறத்தார்கள் உண்டு. வெகு நாளைக்குமுன் சூரிய குலத்தில் அரிச்சந்திரன் என்று பெயர் வாய்ந்த ஓர் சக்கரவர்த்தி இருந்தான். அவன் நீர்வளம், நிலவளம் பொருந்திய கோசல தேசத்தை ஆண்டு வந்தான். அயோத்தி என்னும் அணிநகர் அந்நாட்டிற்குத் தலைநகராய் விளங்கிற்று.

அரிச்சந்திரன் குணத்திற் சிறந்தோனாய் விளங்கினான். இரப்போர்க்கு ஈவதில் கருணனை நிகர்த்தவன். சத்திய விரதத்தைச் சிறிதேனும் வழுவாது அனுஷ்டிப்பவன். அவன் மனைவிக்குச் சந்திரமதி என்று பெயர். அவள் கற்பில் அருந்ததியைப் போன்றவள்; வனப்பில் இலக்குமியை ஒத்தவள், பொறுமையிற் பூமியை நிகர்த்தவள். அவளுக்கு தேவதாசன் என்று ஓர் மகன் பிறந்தான்.

ஒரு நாள் தேவர்களுக்கு அரசனான இந்திரன் பல இருடிகளுடன் தனது சபா மண்டபத்தில் கொலு வீற்றிருந்தான். அச்சமயம் அவன் அங்கிருந்த இருடிகளை நோக்கி "முனிபுங்கவர்

கனே! பூவுலகிலுள்ள அரசர்களில் சத்தியம் தவறுதவன் யாவன்!" என வினவினுன். அதற்கு வசிஷ்டர் "ஒருபோதும் சத்தியம் தவறுதவன் அரிச்சந்திர மன்னவனே யாவன்" என்ருர்.

விசுவாமித்திரர் அச்செய்தியை மறுத்தார், இருவருக்கும் வெகுநேரம் விவாதம் நடந்தது. கடைசியாக, விசுவாமித்திரர் வெகு கோபத்துடன் "அரிச்சந்திரன் பொய்யன் என்பதை ருசுப்

படுத்துவேன். இல்லாவிடில் நான் என் தவத்திற் பாதியை இழப்பேன்” எனச் சபதம் செய்தார்.

பிறகு விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய் புகலும்படி செய்ய பல சூழ்ச்சிகள் செய்தார். அவற்றில் ஒன்றேனும் பயன்படவில்லை. ஒரு நாள் அவர் அரிச்சந்திரனிடம் சென்று “வேந்தர் வேந்தே! நான்யாகம் செய்யஎத்தனித்திருக்கிறேன். அதற்கு தாங்கள் பொருள் உதவி புரிய வேண்டும்” எனக்கேட்டார். அரிச்சந்திரனும் அவ்வாறு வேண்டின பொருள் தருவதாய் ஒப்புக்கொண்டான். முனிவர், தான் பிறகு வந்து அப்பொருளைப் பெற்றுப் போவதாய்ச் சொல்லிப் போய்விட்டார்.

சில நாட்கள் கழிந்தபின் விசுவாமித்திரர் மறுமுறை அரிச்சந்திரனிடம் வந்து, அவனைத் தனக்கு அவனது நாடு முழுமையும் கொடுக்கும்படி யாசித்தார். உடனே அரிச்சந்திரன் நீரை எடுத்து முனிவர் கையில் பெய்து தனது தேச முழுமையும் அவருக்குத் தத்தம் செய்தான், பிறகு அவன் தன் இல்லாளையும், புதல்வனையும் அழைத்துக்கொண்டு நாட்டை நீங்கிகாட்டிற்குச் சென்றான்.

பின்னும் முனிவர் அவனை விட்டபாடில்லை. அவர் ஓர் அந்தணனை அரிச்சந்திரனிடம் அனுப்பி, அவன் முன்பு தனக்கு யாகத்திற்குத் தருவதாய் ஒப்புக்கொண்ட பொருளை வாங்கி வரும்படி ஏவினார். நாட்டை இழந்த அரிச்சந்

திரனிடம்பொருள் ஏது? என் செய்வான் பாவம்! ஆயினும் சத்திய நெறி தவருதவனுதலால் அவன் எவ்வாருயினும் தன் வாக்குறுதியை நிறைவேற்ற எண்ணிஞன். தனது மனேவியையும், மகனேயும் காசி நகரிலிருந்த ஓர் வேதியனிடம் அடிமைகளாக வைத்துப்பொருள் வாங்கிஞன். அப்பொருளே விசுவாமித்திரரிடமிருந்து தனனிடம் வந்திருந்த பிராமணனிடம் கொடுத்து முனிவரிடம்சேர்ப்பிக்கும்படி வேண்டினன். அம்மறையவன் தனக்கு ஏதாவது கூலி வேண்டுமெனக் கேட்டான். உடனே அரிச்சந்திரன் காசியில் சுடலே காத்துவந்த வீரவாகு என்னும் புலேயனிடம் தானும் அடிமைப்பட்டு அம்மறையவனுக்கு, வேண்டிய பொருளே வாங்கிக்கொடுத்து அவனே சந்தோஷப்படுத்தி அனுப்பிஞன்.

சந்திரமதியையும், தேவதாஸனேயும் அடிமை கொண்ட அந்தணன் மிகக் கொடியவன். அவன் அவர்களே வெகு குரூரமாய் நடத்திவந்தான். சந்திரமதி வெகு பொறுமையோடு அவனுடைய வீட்டுவேலேகளே யெல்லாம் சிறிதேனும் வழுவாது செய்துவந்தாள். தேவதாஸன் நாடோறும் காட்டிற்குச் சென்று அந்தணனுக்கு வேண்டிய சமிதை, மாவிலே, தருப்பைப்புல் முதலியவற்றைக் கொண்டுவருவது வழக்கம். ஒருநாள் அவன் தருப்பை கொய்யும்போது ஓர் அரவம் தீண்டி இறந்தான்.

தன் மகன் இறந்ததை அறிந்த சந்திரமதி மிக்கத் துயரத்துடன் அந்தணன் முன் சென்று

அவனை வணங்கி "ஐயனே! தங்களுக்குச் சமிதை, தருப்பை முதலியன கொண்டுவரக் காடு சென்ற என் மகன் அங்கு ஓர் அரவம் தீண்டினதால் மாண்டான். அவனை எடுத்து அடக்கம் செய்து வர உத்தரவு கொடுத்தருள வேண்டும்" என்று வேண்டினள். அந்தணன் வெகுநேரம் வரையில் உத்தரவு கொடுக்க வில்லை. கடைசியாக அவன் அவளைப் பொழுது விடிவதற்குமுன் வீடுவந்து சேரவேண்டும் என்று கண்டிப்பாய்ச் சொல்லி அனுப்பினான்.

சந்திரமதி காட்டிற்குச் சென்று அங்கு தரை மீது கிடந்த தன்னருமைப் புதல்வனின் சவத்தை எடுத்துத் தன் மடிமீது வைத்துக்கொண்டு பலவாறு புலம்பினாள். அங்கு அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை. பிறகு அவள், சவத்தைத் தனது தோள்மேல் தூக்கிக்கொண்டு சுடலையைத் தேடி அடைந்தாள். அங்கு பிணத்தை எரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தானே செய்யலானாள். அச்சமயம் அங்கு காவலாயிருந்த அரிச்சந்திரன் ஓடி வந்து "யார் இங்கு இரகசியமாய்ப் பிணத்தைச் சுட ஏற்பாடு செய்வது? சுடு கூலி கொடுத்த பிறகன்றோ பிணத்தை எரிக்கவேண்டும்" எனச்சீறினான். ஆ! என் செய்வாள் சந்திரமதி!

பிணமானது தன்னுடைய செல்வனென்றும் அதனை எரிக்க வந்தவள் தன் மனைவி என்றும் அறிந்த அரிச்சந்திரன் மிக்க வருந்தினான். எனினும் சுடுகூலியில்லாமல் அவளைப் பிணஞ்சுட

அனுமதிக்க வில்லை. சந்திரமதி அந்தணன் வீட்டிற்குப் போய் அவனிடம் சுடுகூலிக்குப் பணம் பெற்றுத் திரும்பவும் மயானத்திற்குப் புறப்பட்டாள். வரும் வழியில் களைப்பினால் மதிமயங்கிச் சற்று படுத்துறங்கினாள். அச்சமயம் காசி ராஜன் அரண்மனையில் கொள்ளையிட்டு அவன் குழந்தையைக் கொலை செய்து தூக்கி வந்த சில திருடர்கள் அந்த இறந்த குழந்தையைச் சந்திரமதியின் அருகில் போட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார்கள்.

அரசனுடைய குழந்தையைத் தேடி வந்த சில சேவகர்கள், அக்குழந்தை சந்திரமதியின் பக்கத்தில் கொலையுண்டுகிடப்பதைக் கண்ணுற்றார்கள், உடனே அவர்கள் சந்திரமதியே அக்குழந்தையைக் கொன்றவள் என்று எண்ணி அவளை அரசன் முன்னிலையில் அழைத்துச்சென்றார்கள். அரசன் அடங்காக் கோபங் கொண்டு அவளைக் கொலைக்குக் கொலை வரங்கும்படி ஆக்ஞாபித்தான். உடனே சேவகர்கள் அவளை மயானத்திற்கு அரிச்சந்திரனிடம் அழைத்துப்போய் அவனுக்கு அரசன் ஆணையை அறிவித்தார்கள். அரிச்சந்திரன், எல்லாம் விதியின் பயன் என்று எண்ணித்தனது வாளை உருவிச் சந்திரமதியை வெட்ட ஆயத்தமானான்.

உடனே விசுவாமித்திரர் அங்குத் தோன்றி அரிச்சந்திரன் ஓங்கின வாளைத் தடுத்து "அரிச்சந்திரா! உன்னைப்போன்ற சத்தியவான் மூவுலகிலுமில்லை. உன் சத்தியத்தை இவ்வாறு சோதிப்பதற்கே பற்பல தீங்குகள் இழைத்தேன். என்

தவத்திற் பாதியை இதோ உனக்குத் தத்தம் செய்தேன். நீ, உனது நாட்டைத் திரும்பவும் பெற்று நீடூழிவாழ்வாய்" என ஆசி கூறினர். இறந்து கிடந்த தேவதாஸனும், காசி மன்னனுடைய குழந்தையும் மீண்டும் உயிர் பெற்றனர். அரிச்சந்திரன் மறுபடியும் அரசனுகிக் கோசலத்தை ஆண்டு வந்தான்.

"சத்தியம் தலை காக்கும்"

"உண்மையிற் சிறந்த ஒழுக்கமில்லை"

---

26. சாரணத்தொண்டர்—I

இப்பொழுது பெரிய நகரங்களிலும் சிறிய நகரங்களிலும் உள்ள பள்ளிக்கூடங்களில் "பாய் ஸ்கௌட்ஸ்" என்னும் நாமம் பூண்டு, பிரத்தியேகமான உடை தரித்து, திருவிழாக் காலங்களிலும், ஏனைய விசேஷ சமயங்களிலும், கூட்டத்தின் இடையே இருந்து தொண்டு செய்துவரும் வாலிபக் கூட்டத்தாரை உங்களில் அநேகர் கண்டிருக்கலாம். அவர்கள் வரலாற்றை ஈண்டு கூறுவோம்.

ஆங்கிலத்தில் 'ஸ்கௌட்ஸ்' என்னும் பதத்திற்கு, சாரணர், வேவுகாரர் அல்லது ஒற்றர் என்பது பொருள். யுத்த காலங்களில் இராஜாங்கத்திற்கு உள் நாட்டு, வெளி நாட்டு இரகசியங்களை அறிந்து தெரிவிப்பவன் என்னும் மூல அர்த்தம் உடையது. இப்பொழுது, பொதுஜன சமூகத்திற்கு எப்பொழுதும் ஊழியம் செய்

பவன் என்னும் பொருளில் அப்பதம் வழங்கி வருகிறது.

இவ்வித வாலிபச் சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்தவர் லார்ட் ராபர்ட் பேடன் பவல் என்னும் ஆங்கில தளகர்த்தப் பெரியார். இவரே உலகச் சாரணர்கட்குத் தலைச் சாரணராவார். இங்கிலாந்தில் 1908-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த வாலிபச் சாரணர் இயக்கம் இப்பொழுது உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் பரவி நிலை பெற்று விருத்தியடைந்து வருகிறது.

லார்டு ராபர்ட் பேடன் பவல் 1857-ம் ஆண்டு பிறந்தார். இவர் முதன் முதல் ஆங்கில சேனையில் கொஞ்சம் உயர்தரப் பதவியில் அமர்ந்தார். பிறகு இந்திய ராணுவப் படையிலும் கொஞ்ச காலம் இருந்து 1900-ஆம் ஆண்டு, தென் ஆபிரிக்கா யுத்தத்தில் பிரபல கியாதி பெற்றுர். "ஸர்" என்ற பட்டம் சூட்டப்பட்டார். பிறகு சிறிது காலம் இங்கிலாந்தில் குதிரைப்படை பரிசோதகராய் இருந்து பல சீர்திருத்தங்கள் செய்தார். 1929-ம் ஆண்டில் இங்கிலாந்தில் அகில உலக "ஸ்கௌட் ஜாம்பூரி" நடைபெற்ற காலத்தில் இவருக்கு "லார்ட்" பட்டமும் வழங்கப்பட்டது. இவர் நீடுழி வாழ இறைவன் அருள்புரிவாராக.

இனி வாலிபச் சாரணர் இயக்கத்தினுல் தேசத்திற்கும் வாலிபர்களுக்கும் உண்டாகும் நன்மைகளைப்பற்றி சிறிது ஆராய்வோம். நமது நாட்டுச் சிறுவர்களில் பெரும்பான்மையோர் திட

காத்திரமும் தேகவன்மையும் அற்றவர்களாய் இருக்கிறார்கள் என்பது நமது தாய் நாட்டிற்கே இழிவுக்கிடமாக இருக்கிறது. ஆகையால் அவ் வித வசைச்சொல்லுக்கு இடங்கொடாமலிருக்க முயலவேண்டியது உங்களுடைய முக்கியகடமை யல்லவா! சாரணர் இயக்கத்தில் சேர்ந்துள்ள வாலிபர்களுக்கு, தேகபலமும், சுறுசுறுப்பும் உண்டுபண்ணுவதற்கு வேண்டிய ஸாதகங் களும், தேகப்பயிற்சி முறைகளும் அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றன. தினந்தோறும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது கட்டடங்களில் அடைபடாமல் சுத்த ஆகாயமுள்ள தோப்புக் களிலும் மைதானங்களிலும் இருந்து வருவது தேக ஆரோக்கியத்திற்குச் சிறந்ததோர் முறை யாகும். இச்சங்கத்தாரின் காரியங்கள் நடை பெறும் இடங்கள் யாவும் அனேகமாய் இவ்வித இடங்களாகவே இருக்கும்.

இச்சங்கங்களில் நடைபெறும் விஷயங்கள் எல்லாம் சிறுவர்களுக்கு உற்று நோக்கும் சக்தி யையும் மதியூகத்தையும், விருத்தி செய்யும். மே லும், கண்கண்ட விஷயங்களிலிருந்தும் செவிக் கெட்டின செய்திகளிலிருந்தும் சரியான அனு மானங்களை அறியும்படியான கண்ணோட்டத்தை யும், சூக்ஷமங்களை அறியும் திறத்தையும் உண்டு பண்ணும்.

இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் ஜனசமூக ஊழியமேயாகும். தன்னலத்தை இழக்க நேரிடி

னும் பிறருக்குத் தன்னால் இயன்ற உதவிபுரியும் தன்மையை வெளிப்படையாகக் காணலாம். உற்சவ காலங்களிலும், மற்றும்விசேஷ கூட்டங்கள் கூடும் இடங்களிலும், இத்தொண்டர்கள் வெயில் கானல் என்று கருதாமல் செய்துவரும் நன்மைகள் அநேகம் ஆகும்.

பெரியோர்கள், அதிகாரிகள் முதலானோர்களின் ஆணைக்கு அடங்கி நடக்கும் குணம் மிக்க நன்மை பயக்கக்கூடியது. சிறுவயதிலிருந்தே பெரியோர்களுக்குக் கீழ்படிந்து நடக்கும் குணம் ஒருவனுக்கு ஏற்பட்டுவிட்டால் அவன், வாழ்நாளில் மேலான பதவியை அடைவான் என்பது திண்ணம். இத்தகைய நற்பழக்கம் சாரணச்சிறுவர் படையில் மிக நன்றாய் ஏற்படுவதற்கு இடமுண்டு. ஆகையால் சாரணச் சிறுவர் இயக்கம் எவ்விதத்திலும் அரிய நன்மைகள் உண்டாக்கக் கூடியதாயிருக்கிறது.

27. சாரணத்தொண்டர்-II.

சாரணத்தொண்டர் சங்கத்தின் விதிகளையும், சட்டதிட்டங்களையும், அமைப்பையும்பற்றி நீங்கள் கொஞ்சம் தெரிந்துகொள்ளுவது அவசியம். சாரணர் மூவகைப்படுவார். ஆறு வயது முதல் பதினொரு வயதுவரை உள்ளவர்களை ஒரு வகையினராகவும் பதினொருவயதிற்குமேல் பதினெட்டு வயதுக்கு மேற்படாதவர்களை மற்றொரு வகையினராகவும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களை இன்னொரு வகையினராகவும் பிரித்திருக்கிறார்கள்.

இச்சங்கத்தில் புதிதாகச் சேரும் சிறுவன் மூன்று உறுதி மொழிகள் செய்யவேண்டும். அவை பின் வருமாறு:—(1) வஞ்சனையில்லாமல் கடவுளுக்கும், தேசத்திற்கும், அரசனுக்கும் உரிய கடமைகளைச் செய்வேன். (2) எந்த காலத்திலும் பிறருக்கு உபகாரம் செய்ய முழுமனதுடனும் முன் வருவேன். (3) சாரணச்சட்டங்களுக்கு எப்பொழுதும் உள்ளடங்கி நடப்பேன். மேற்கூறிய உறுதிமொழிகள் யாவும் சாரணப் படையின் முன்னிலையில் செய்யப்படவேண்டும். அப்பொழுது சாரணர்கள் எல்லாரும் "குதிரைக்குளம்பு வியூகம்" வகுத்து நிற்பார்கள். அப்படையின் ஆசிரியரும், உதவியாசிரியரும் அந்த அணியின் வாயிலில் நிற்பார்கள். உறுதிமொழிகள் கொடுத்தவுடன் சாரணச்சின்னங்களும், தோள்முடியும், தண்டமும் அளிக்கப்படுவான்.

ஒரு சாரணச் சிறுவன் அநுசரிக்கவேண்டிய விதிகள் பத்து ஆகும். சாரணச் சிறுவனுடைய வார்த்தை ஸத்யமாக நம்பத்தக்கது. அவன் சொல்வதைப் போலவே செய்வான். சொல் ஒன்றும் நடத்தை ஒன்றுமாக இராது. எவ்வித கட்டளையிட்டபோதிலும் அவன் அதைச் செய்தே தீருவான்.

அரச பக்தியும் விசுவாசமும் வேண்டும். தந்தை, தாய், உற்றார், சுற்றத்தார் முதலானோரிடத்தில் எக்காலத்திலும், எக்காரணங்களினாலும் நீங்காத அன்பு உடையவனாக இருக்கவேண்டும்.

பரோபகார சிந்தை உள்ளவனுக யிருத்தல் வேண்டும். தன்னுடைய சுகத்தைக் கருதாமல் பிறருக்கு உதவிபுரிய மனங்கொள்ளவேண்டும். அப்படிச்செய்வதில் தனக்கு ஆபத்து நேரிடுவ தாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தக் கூடாது. உதாரணமாக, தண்ணீர்விபத்துக்களில் அஞ்சாமல் உதவி செய்யவேண்டும்.

எவ்வித வித்தியாசமும் யாரிடமும் பாராட் டக்கூடாது. ஜாதி, மதவித்தியாசம், ஏழைபணக் காரன் என்ற பேதம்முதலியன இல்லாமல் யாரி டத்தும் சிநேகமாயிருக்க வேண்டும். சாரணச் சிறுவனுக்கு அகம்பாவம் கூடாது. தான் ஓர் எளியவன் என்ற துக்கம் இருத்தல் தகாது.

யாரிடத்தும் மரியாதை இருத்தல் வேண் டும். சிறியோர், பெரியோர், கற்ருேர், கல்லாதார் என்னும் பேதமில்லாமல் எல்லாரிடத்தும் ஒரே விதமான மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஜீவப்பிராணிகளுக்குத் துன்பம் செய்யலா காது. மெலிந்த பிராணிகளுக்கும் வியாதி யடைந்த பிராணிகளுக்கும் தன்னுல் இயன்ற உதவி புரிதல் வேண்டும்.

பெற்ருேர், சங்கத்தலைவர், ஆசிரியர் ஆகிய இவர்களுடைய ஆணைக்குவெறுப்பின்றி அடங்கி நடக்கவேண்டும். தனக்கு இஷ்டமில்லாத பணி யை அவர்கள் செய்யச்சொன்னகாலத்தும், முன் னுல் அதைச் செய்துவிட்டு, பிறகுதான் தன்

மனப்பாங்கை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

எக்காலத்திலும் சந்தோஷமாயிருத்தல் வேண்டும். எக்காரணம் பற்றியேனும் முக வாட்டமுற்றுக் கலங்கி நிற்பது ஒரு சாரணச் சிறுவனுக்கு அழகன்று. எவ்வித ஆபத்து ஸம்பவங்கள் நிகழ்ந்த காலத்தும் ஊக்கம் குன்ருது உற்சாகமாக இருத்தல்வேண்டும்.

ஓர் சாரணச் சிறுவன் செட்டும் கட்டுமாக இருத்தல் அவசியம். தனக்குக் கிடைக்கும் பொருளை அனுவசியமாகச் செலவு செய்யாமல், அவசியமான வழியில் உபயோகப்படுத்த வேண்டும். தனக்கு ஆபத்துத் தனமாகக் கொஞ்சம் பணத்தைச் சேமித்து வைக்க வேண்டும்.

நல்ல விஷயங்களைப்பற்றியே நினைக்கவேண்டும். செய்யும் காரியங்கள் இழிவானவையாயிராமல் புகழுக்கு இடமானவையாக இருக்க வேண்டும். தீயோர் கேண்மையை அறவே அகற்றவேண்டும்.

இவ்வித நற்போதனைகள் இன்னும் அனேகம், வகுப்பில் ஆசிரியரால் போதிக்கப்படும். இவற்றை நன்ருய்ப் பின்பற்றி நடக்க முயலுவதால் பல நலங்கள் உண்டாகும். சிறுமியர்களுக்காக ஒரு சங்கத்தையும் லார்டு ராபர்ட் பேடன் பவல் ஏற்படுத்தியிருக்கிருர். இதில் இவருடைய மனைவி பெருமாட்டியார் மிக்க ஊக்கத்துடன்

வேலை செய்து வருகிறார். இச்சங்கத்து சிறுமியர்களுக்கு 'பெண் சகாக்கள்' என்பது பெயர்.

---

28. கூட்டுறவு இயக்கம்–I.

கூட்டுறவு என்பது மனிதர்களுக்கு இன்றியமையாத ஓர் வாழ்க்கைத் துணை நலம் ஆகும். எத்தால் பிழைக்கலாம்? ஒத்தால் பிழைக்கலாம்." என்பது ஆன்றோர் மொழியாகும். பிறருடன் விரோதப்படாமல், சிநேகமாய் இருக்கவேண்டும் என்னும் கருத்தைத் தவிர, இதற்கு வேறோர் உட்பொருளுமுண்டு. அது யாதெனில், மனிதர் யாவரும் தம் தம் நன்மைக்காகவும் பிறர் நன்மைக்காகவும் மற்றவர்களுடன் ஒருமனப்பட்டு பாடுபடவேண்டும் என்பதாம்.

இவ்வித உணர்ச்சி நம்மவரில் பெரும்பாலரிடம் காணப்படாமல் இருப்பதற்கு அவர்களுடைய பேதமையே காரணமாகும். ஆனால் நமது புராதனப் பழக்கங்களை ஆராய்வோமானால் நம் முன்னோர்களிடம் ஐக்கியப்பான்மை அதிகமிருந்ததென்று காணப்படும். இற்றைக்கும் நமது நாட்டில் சிற்சில இடங்களில் ஒளிமங்கிய தீபம்போற் காணப்படும். தாயப்பொருள் பிரிவினையில்லாக் குடும்பங்களே இதற்குச் சிறந்த சான்றாகும்.

ஒரு தாய் வயிற்றிற்றோன்றிய சகோதரர் பலரும் தங்களுடைய சொத்தை, ஆதாய விரய விஷயங்களில் உண்டாகும் மனவித்தியாசங்களைப் பெரிதாகக்கொள்ளாமல், சேர்ந்து உழைத்துப்பாடு

படுவதால் பலவித லாபங்கள் உண்டாகும். இரத்த சம்பந்தமில்லாத பலர், ஜாதி மத வித்தியாசமின்றித் தங்களுடைய பொது நன்மைக்காக அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிக்குத்தான் கூட்டுறவு இயக்கம் என்பது பெயர். இனி இவ்வித இயக்கத்தின் முறைகளுள் சிலவற்றைப்பற்றியும், அது நல்கும் கைகண்ட ஊதியங்களைப்பற்றியும், உங்களுக்குக் கொஞ்சம் தெரியவேண்டும்.

கூட்டுறவு என்பது எளியவர்களைவிட்டு என்றும் நீங்காத வறுமைப் பிணியை வேருடன் களைய வல்லதோர் சஞ்சீவியாகும். வறுமை நோயகற்றும் இம்மூலிகையை முதன் முதல் இவ்வுலகத்தார்க்கு வழங்கியவர் ஜர்மனி நாட்டிற் பிறந்த ஓர் பெரியோராகும். இவர், ஏழைகள் படும் கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்டு சகியாதவராய், அவர்கள்பால் கிருபை கூர்ந்து கூட்டுறவு முயற்சி என்பதை ஜனங்களுக்குப் போதித்து, நிதிகளையும் ஏற்படுத்தினார்.

நிதிகள், கிராம நிதிகள், நகர நிதிகள் என இருவகைப்படும். கிராமங்களில் நிதிகளை ஏற்படுத்துவதைவிட நகரங்களில் வெகு சுலபமாய் ஸ்தாபித்துவிடலாம். இந்தியாவிற்கு உயிர்நிலையாக விளங்குவது கிராமங்களேயாம். ஏனெனில், விவசாயமே இந்தியர்களுக்கு முக்கிய ஜீவன வகையாக அமைந்திருப்பதுதான் காரணமாகும். இவர்களில் பெரும்பான்மையோர், காலமழையின்மையாலும், அகாலமழையினாலும், ஆற்று வெள்ளம் வேண்டியபோது வேண்டிய அளவு

இல்லாமையாலும், நவீன விவசாயமுறைகளை நன்ருய் அறியாமையினுலும் நில வருவாய் குறைவுபட்டு, செலவுக்குப் போதாமல் கடன் பட்டு பலவித கஷ்டங்களை அனுபவிக்கிருர்கள்.

நமது நாட்டில் பணமுள்ளவர்கள் சொற்ப மாயும் கடன் வாங்குகிறவர்கள் அதிகமாகவும் இருக்கிருர்கள். சில வருடங்களில் நிலவருமானம் மிகக் குறைந்து குடும்பச் செலவுக்கும் வட்டிக்கும் போதும்போதாததாய்போய்விடும். மற்றும் சில வருடங்களில் வட்டி கூடக் கொடுபடாமல் பாக்கி நின்றுவிடும். இந்நிலைமையில் இருப்பவர்கள் எவ்வாறு கடன் வாங்கிய முதலை திருப்பிக்கொடுப்பார்கள்? கடைசியாக இவர்கள் தங்கள் நிலங்களை இழக்கும்படி நேரிடுகிறது இவ்வித கஷ்டங்களை விலக்கும்பொருட்டு இப்பொழுது கிராமக்கூட்டுறவு நிதிகள் பற்பலவிடங்களில் ஏற்பட்டிருக்கின்றன.

கிராமக் கூட்டுறவு நிதிகளில் அங்கத்தினராய் இருப்பவர்களுக்கு மாத்திரமே கடன கொடுக்கப்படும். வட்டியும் சொற்பமாயிருக்கும். வட்டியும் முதலும் குறைந்தது இருபத்து நான்கு தவணைகளில் கொடுக்கவேண்டும். தவணைதோறும் கொடுபடும் முதலுக்கும் வட்டி குறைத்துக்கொள்ளுவார்கள். மேலும் அந்த நிதியின் லாபத்தில் அங்கத்தினர்களுக்கு அவர்கள் கட்டியிருக்கும் பங்குத் தொகை வீதப்படி பங்கு பகிர்ந்து கொடுக்கப்படும். ஆனல் அனுவசியமான காரியங்களுக்குக் கடன் கொடுக்கப்படமாட்டாது. குடும்

பச் செலவுக்கும், கால்நடை, எரு, விதை முதலி யன வாங்குவதற்கும் கடன் உதவிபெறலாம். ஓர் கிராமவாசியின் நடத்தையும், அந்தஸ்தும் மற் றவர்களுக்கெல்லாம் நன்ருய்த் தெரிந்திருக்குமா தலால் அயோக்கியர்களும் நாணயமற்றவர்க ளும் கடன்பெற இயலாது. சொத்து அடமா னத்தின் மீதாவது அல்லது வேறு ஒருவருடைய மேலொப்பத்தின் மீதாவது கடன் கொடுக்கப் படும். பூஸ்திதி யில்லாவிடினும் நல்ல நடத் தையும், நாணயமுமுள்ளவர்களுக்கும் மற்றத் தொழிலாளிகளுக்கும் நபர் ஜாமீன்மீது கடன் கொடுக்கப்படும்.

இவ்வாறு கடன் கொடுப்பதற்கு நிதிகளுக் குப் பணம் எங்கிருந்து கிடைக்குமென்று உங்க ளுக்குத் தெரிந்துகொள்ள அவா இருக்கலாம். ஒரு நிதியில் சேர்ந்துள்ள அங்கத்தினர்களின் மொத்த சொத்துப் பொறுப்பின்மீது தனவந்தர் களான அங்கத்தினர்களிடமிருந்தேனும், அல் லது மற்றவர்களிடமிருந்தேனும், மத்திய நகர நிதிகளிலிருந்தேனும் தேவையான பணத்தைக் குறைந்த வட்டிக்கு நிதிகளால் கடன் வாங்கப் படும். இவ்வாறு கடன் வாங்கப்பட்ட பணம் அங்கத்தினர்களுக்குக் கொஞ்சம் அதிக வட்டிக் குக் கொடுக்கப்படும். இந்த இரண்டு வட்டிக்கு முள்ள வித்தியாசத்தொகைதான் நிதியின் வரு மானமாகும். இவ்வருமானத்தில் செலவு போக மீதியை லாபப்பணமென்று அங்கத்தினர்களுக் குப் பிரித்துக் கொடுக்கப்படும்.

ஓர் நிதி ஏற்படுங்காலத்தில் அந்த நிதியின் மூலதனம் எவ்வளவு என்று நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். இம்மூலதனத்தொகையை அனேக பங்குகளாகச் செய்து பங்கு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் என்று திட்டம் செய்ய வேண்டும். அங்கத்தினர்கள் நிதியிற் சேரும்போது பங்கு பணத்தைச் செலுத்த வேண்டும். ஒருவர் ஒன்று அல்லது அதிக பங்குகள் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒருவர் எடுத்துக்கொள்ளும் பங்கு இத்தனைக்குமேற்படலாகாது என்ற நியமம் உண்டு.

இவ்வித நிதிகளிற் சேருவதால் உண்டாகும் பலவித நன்மைகளை யோஜித்துப் பாருங்கள். (1) குறைந்த வட்டிக்குப் பணம் கிடைக்கிறது. (2) முதலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுக்கலாம். (3) கடன் கொடுத்தவர்களின் நிற்பந்தமில்லாது மாசூலைக்கட்டி வைத்திருந்து தக்கவிலை வரும்போது விற்று லாபம் அடையலாம் (4) அனாவசியமான செலவுகளுக்கு நிதியில் பணம் கிடைக்காது. (5) நிதிகள் கடன் வாங்குகிறவர்களுடைய க்ஷேமத்தைக் கருதியே கடன் கொடுக்கின்றன. 'சவுக்கார்கள்' தங்களுடைய லாபத்தை மட்டும் உத்தேசித்து கடன் கொடுக்கிறார்கள் அவர்கள் தங்களிடம் கடன் வாங்குபவனின் நன்மையை நாடமாட்டார்கள். அவர்களுக்கு எப்படியாவது வட்டிவந்தால் போதும்.

நகர நிதிகளும் கிராம நிதிகளைப் போன்றவைகளேயாகும். ஆனால் இரண்டிற்கும் ஒரு

பெரிய பேதமுண்டு. கிராம நிதிகள் முறிந்து போனல், நஷ்டத்தை அங்கத்தினர்கள் தங்களுடைய சொந்த ஆஸ்தியிலிருந்து ஈடு செய்ய வேண்டும். நகர நிதிகளின் அங்கத்தினர் இவ்வித சந்தர்ப்பம் நேரிட்டால் தங்கள் பங்குத்தொகையின் அளவாகவே ஈடு செய்யவேண்டும். இதற்கு காரணம் யாதெனில், கிராமத்தில் கடன் வாங்குபவர்களை அங்கத்தினர் நன்ருய் அறிந்திருப்பார்கள். கடன்காரர்கள் மோசம் செய்ய மாட்டார்கள் என்ற திட நம்பிக்கைக்கு இடமுண்டு. நகரத்திலோவெனில் ஒருவருக்கொருவர் அதிக நெருங்கிய பழக்கத்துக்கு இடமில்லை ஆகையால் ஒருவர் மற்ருெருவரை நம்புவதற்கும் ஏதுவில்லை.

---

29. கூட்டுறவு இயக்கம் II.

கூட்டுறவு இயக்கத்தில் நிதிகளை ஸ்தாபிப்பது போல், வேறுபல வழிகள்உள. கூட்டுறவு பண்டக சாலைகள் ஏற்படுத்தலாம். நமது நாட்டில்இவ்விதபண்டகசாலைகள் இதுகாறும்அதிகமாக ஏற்படவில்லை. தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவு இயக்கமெல்லாம் லேவாதேவி சம்மந்தமாகவேயிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் நம்மவர்களிடம் காணப்படும் அவநம்பிக்கையும், சுயநலம் பாராட்டுதலுமேயாகும். நமது நாட்டிலுள்ள வியாபாரிகள் யாவரும் அதிக லாபத்தைத் தாங்களே அடையவேண்டும்என்ற அவா உடையவர்களா யிருக்கிருர்கள்

ஆகையால் கூட்டுறவு வியாபாரத்திற்கு முன் வருவாரில்லை.

கூட்டுறவு வியாபாரமென்றால் அங்கத்தினர்களுக்குத் தேவையான ஸாமான்களை மொத்தமாக வாங்கி மளிகைக்கடைகளில் விற்பதுபோல் சில்லரையாக விற்பது ஒருவிதமாகும். ஆனால் கடைத்தெருவில் கிடைப்பதுபோல் கடனுக்குச் சாமான்கள் கிடைக்காது. அவ்வப்போது ரொக்கங் கொடுத்தே வாங்கவேண்டும்.

இவ்வித முறையினால் உண்டாகும் சௌகரியங்கள் பல ஆகும். நல்ல சாமான்கள் பெறலாம். நிறை அளவு முதலியவை குறையாமல் இருக்கும். அங்கத்தினர்களுக்கு லாபத்தில்பங்கு கிடைக்கும். விலையும் நயமாயிருக்கும். கடைத் தெருவில்இவ்விதமான சௌகரியங்களை ஒரு நாளும் அடையமுடியாது. "கடைக்குக்கடை ஆள்தான்" என்பது இதன் உண்மையைக்காட்டுகிறது.

உலகத்தில் நடைபெறும் வியாபாரத்தில்சிறிதளவேனும்தரகர்கள் இல்லாமல் நடக்கிறதில்லை இத்தரகர்கள் கிராமங்கள்தோறும் சென்று அங்கு கிடைக்கும்பண்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி, பின்னால் அதிகலாபத்துடன் மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். மிராசுதார்களும், குடிகளும் தங்களிடமுள்ள பண்டங்களைப் பணத்தேவையால் குறைந்த விலைக்கே விற்று விட நேரிடுகிறது. ஒரு கூட்டுறவு விற்பனைச்சங்கம் ஒவ்வொரு கிராமத்திலோ அல்லது

சிலகிராமங்களுக்கு ஒன்ருகவோ இருந்தால் இவ்வித நஷ்டத்துக்கு இடமுண்டாகாது. விற்பனை செய்யவேண்டிய பொருள்களையெல்லாம் தங்கள் பண்டகசாலையில் சேர்த்து வைத்துக்கொண்டு தேவையுள்ள குடிகளுக்குப் பண உதவி செய்து கொண்டு, பிறகு தக்க விலை வரும்போது விற்று, சங்கத்திற்கு குடிகளிடமிருந்து வரவேண்டிய தொகையை எடுத்துக்கொண்டு மீதியை அவர்களுக்குக் கொடுத்தால் நமது நாட்டு விவசாயிகளுக்கு அதிக க்ஷேமம் உண்டாகும்.

வீடுகள் கட்டப் பணம் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தலாம். இவ்விதச் சங்கங்கள் சிலவிடங்களில் நூதனமாய் ஏற்பட்டிருக்கின்றன. இதில் அங்கத்தினர்களுக்கு வீடு கட்டுவதற்கு வேண்டிய பொருளையுதவி அந்தப்பணத்தை வட்டியும் முதலுமாக இருபது வருடங்களில் வாங்கிக்கொள்ளுகிருர்கள். இக்கூட்டுறவு முயற்சியை இன்னும் பலவிதங்களில் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாம்.

பிள்ளைகளே இதுகாறும் நீங்கள் படித்த விஷயங்களினுல், உங்களுக்கு ஒரு சமீப லாபமும் இல்லையே என்று நினைக்கலாம். நீங்கள் அவ்விதம் எண்ணவேண்டாம், நீங்களும் ஒன்று சேர்ந்து கூட்டுறவு புத்தகசாலை ஏற்படுத்திக் கொண்டு உங்களுக்கு வேண்டிய புத்தகங்களைக் குறைந்த விலைக்குப் பெறலாம். நீங்கள் சிறுவர்களானபடியால் உங்களுடைய உபாத்தியாயரின் உதவியை நாடிப்பெற்று லாபம் அடையலாம்

நீங்கள் பள்ளிச் சிறுவர்களா யிருக்கும்போதே கூட்டுறவு முறையில் பயிற்சியடைவது மிகவும் நல்லது.

நமது காருணிய ராஜாங்கத்தாரும் இந்த இயக்கத்தை விருத்திசெய்வதில் ஊக்கமுடைய வர்களாயிருக்கிறார்கள். இச்சங்கங்களைப் பரி சீலனை செய்து அவற்றிற்கு புத்திமதி புகட்டப் பிரத்தியேகமான இலாகா ஏற்பட்டிருக்கிறது. இவ்வியக்க சம்மந்தமான விஷயங்களைக் கற்று கொடுப்பதற்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக் கின்றன. அவ்விதப் பள்ளிக்கூடங்கள் தஞ்சை யிலும் கோயம்புத்தூரிலும் இருக்கின்றன.

---

30. கஜேந்திரன்.

பல்லாண்டுகளுக்குமுன்னர் இந்திரத்துய்ம்மன் என்ற ஓர் அரசன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் தனது சபாமண்ட பத்தில் கொலு வீற்றிருந்தபோது, அகத்தியர் என்ற குறுமுனி அங்கு வந்தனர். அம்முனிபுங் கவரின் வரவை அரசன் அறிந்தும் கவனியா திருந்தனன். முனிவர் அடங்காச்சினங்கொண்டு, "அரசே! எனது வரவை நீ அறிந்தும், என்னை மதியாது மதயானைபோல் செருக்குற்று உன் சிங் காதனத்தின்மீது உட்கார்ந்திருந்தமையால் நீ இக்கணமே மதம்பிடித்த யானையாகக் கடவாய்" எனச் சபித்தனர். தவச் சிரேட்டரின் சாபவுரை பொய்யாகுமா? உடனே இந்திரத் துய்ம்மன்

மதம்பிடித்த யானையாகமாறி காட்டையடைந்து அங்குள்ள யானைக்கூட்டங்களுக்குத் தலைவனாகி கஜேந்திரன் என்ற பெயரோடு வாழ்ந்து வந்தான்.

அக்கானகத்தில் ஓர் அழகிய தடாகம் உண்டு. ஓர் நாள் 'ஹூஹூ' என்னும்காந்தருவன் அத்தடாகத்தில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்தான். அவ்வமயம், நீர்க்கடனாற்ற தேவலர் என்னும் ஓர் முனிவர் அங்கு வந்து நீரில் இறங்கினர்! நீரில் விளையாடிக் கொண்டிருந்த காந்தருவன் விளையாட்டாக உடனே நீர்க்குள் மூழ்கி அவரது பாதங்களைப்பற்றி யிழுத்தான்.

முனிவர் உண்மையை அறிந்து, அவனை நோக்கி, "நீ நீர்க்குள்ளிருந்து முதலைபோல் என்கால்களைப்பற்றி இழுத்தமையால் நீ முதலையாக மாறி இத்தடாகத்திலே வசிப்பாயாக," எனச்சாபமிட்டுச் சென்றனர். அவ்வாறே காந்தருவனும் முதலை உருவுடன் அங்கு வாழ்ந்து வந்தான்.

ஓர் நாள் கஜேந்திரன் நீர் வேட்கையினால் அருகிலிருந்த அத்தடாகத்திலிறங்கி நீர் பருக ஆரம்பித்தது. முதலை கஜேந்திரனது காலைப் பற்றிக் கௌவிக்கொண்டது. கஜேந்திரன் முதலையைக் கரையிலிழுக்க முயன்றது. முதலை யானையை நீரில் இழுக்க முயன்றது. இரண்டிற்கும் நெடுநேரம் கடும்போர் நிகழ்ந்தது.

நீரில் இருக்கும்போது முதலைக்கு அதிக பலம் உண்டு. ஆகையால் அம்முதலை கடைசியில் யானையை நீர்க்குள் இழுக்க ஆரம்பித்தது விட்டது. கஜேந்திரன் மிக்க களைப்புற்று அண்ணந்து, துதிக்கையை உயர்த்தி ‘ஆதிமூலமே,’ என ஓலமிட்டது.

வைகுந்த நாதனாகிய திருமால் கஜேந்திரனுடைய அழைப்புக் குரலைச் செவியுற்றதும் அத்தடாகக் கரைக்குவிரைந்தோடி வந்தார். கஜேந்திரன் முதலையினால் பற்றப்பட்டு வருந்துவதைக் கண்ணுற்றார். உடனே மனமிரங்கி தன் திருக்கையிலிருந்த சக்ராயுதத்தை அம்முதலையின் மீது ஏவினார். அவ்வாயுதத்தால் தாக்கப்பட்டு அம்முதலை காந்தருவனாக மாறியது. கஜேந்திரனும் முதலையின் பற்றிலிருந்து விடுபட்டு தன் சாபமும் நீங்கப்பெற்று நற்கதி அடைந்தது.

ஔவையார் அருளிச்செய்த

மூதுரை என்னும்

வாக்குண்டாம்

காப்பு

வாக்குண்டாம் நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திரு மேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

நூல்

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கோ லெனவேண்டா — நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே— அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

3. இன்னா விளமை வறுமைவந் தெய்திபக்கால்
இன்னா வளவி லினியவும்—இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

4. அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவல்ல
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கண் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

5. அடுத்து முயன்றுலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

6. உற்றவிடத்தி லுயிர் வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான்.

7. நீரளவே யாகுமா நீராம்ப லுன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

8. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சோற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

9. தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சோற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

10. நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாந்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

11 பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

12. மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

13. கவையாகிக் கொம்பாகிக் காட்ட கத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

15 வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகாரமானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

16. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும்வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

17. அற்ற குளத்தி னறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவா ருறவு

18. சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலு மல்லாதார் —அல்லாதார்
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

19. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர்ப்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

20. உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

21. இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய்விடும்.

22. எழுதியவா றேமென் றிராமட நெஞ்சே
கருதிவா றுமோ கருமம் —கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

24. நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

25. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

26. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு

27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற் கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

28. சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடா தாதலால்—தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

29. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாந்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

30. சாந்தனையுந் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

——(○)——

தோத்திரப் பாடல்கள்.

—o—

சரஸ்வதி.

1 மண்கண்ட விண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி
யுண்டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே!

திருவாய் மொழி.

2 குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுந்துயர் ஆயினவெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லைநான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

திருவருட்பா.

3. ஒருமையுடன் நினதுதிரு மலரடியை நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்; பொய்மை
பேசா திருக்க வேண்டும்;
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்; மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்;
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்; உனை
மறவா திருக்க வேண்டும்;
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துவளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

விவேக சிந்தாமணி.

1 புத்திமான் பலவா னாவான் பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதத்தி னாலும் இடரது வந்தே தீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய உவமைபோல

2. யானையைச் சலந்தனி லிழுத்தவக் கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப் போகுமோ?
தானையுந் தலைவருந் தலம்விட் டேகினால்
சேனையுஞ் செல்வமுந் தியங்கு வார்களே.

3. ஆபத்துக்குதவாப்பிள்ளை அரும்பசிக்குதவா அன்னம்
தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப்
பெண்டீர்
கோபத்தை அடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச்
சீடன்
பாபத்தைத் தீராத்தீர்த்தம் பயன்இல்லை ஏழுந்தானே

4. குக்கலைப்பிடித்துநாவிக் கூண்டினில் அடைத்துவைத்து
மிக்கதோர் மஞ்சட் பூசி மிகுமணம் செய்தா லும்தான்
அக்குலம் வேறதாமோ? அதனிடம் புனுகுண்டாமோ
குக்கலே குக்கல் அல்லால் குலந்தனில் பெரிய தாமோ

5. வாழ்வது வந்த போது மனந்தனில் மகிழ வேண்டாம்
தாழ்வது வந்த தானால் தளர்வரோ தக்கோர் மிக்க
ஊழ்வினை வந்த தானால் ஒருவரால் விலக்கப் போமோ
ஏழையாய் இருந்தோர் பல்லக் கேறுதல் கண்டிலீரோ

6. ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட்டாலும உண்பதே அமுதம் ஆகும்
முப்பழ மொடுபால் அன்னம் முகங்கடுத் திடுவாரா
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகும் தானே. [யின்

7. ஆலிலை பூவும் காயும் அளிதரு பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தம்குடி என்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை ஆதிபோனால் அங்குவந் திருப்பார் உண்டோ?

8. கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதம்உண்ணும்
விற்பன விவேகம் உள்ள வேந்தரைச் சேர்ந்தோர்
வாழ்வார்
இப்புவி தன்னில் கிள்ளை இலவுகாத் ததனைப் போல
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகும் அம்மா.